# இலைகளின் நரம்புகள்

பா.கோகுல்நாத்

BJ
பதிப்பகம்

**இலைகளின் நரம்புகள் (கவிதைகள்)**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | பா.கோகுல்நாத் |
| காப்புரிமை | : | © பா.கோகுல்நாத் |
| முதல் பதிப்பு | : | மே 2024 |
| பக்கங்கள் | : | 106 |
| வடிவமைப்பு | : | நெகிழன், 79047 48374 |
| அச்சாக்கம் | : | மணி ஆப்செட், சென்னை |
| வெளியீடு | : | BJ பதிப்பகம்<br>101, சர்க்கார்பதி சாலை, சேத்துமடை<br>பொள்ளாச்சி வட்டம் - 642133<br>அலைபேசி : 73393 97567 |
| விலை | : | ரூ120 |

## பா.கோகுல்நாத்

தற்போது கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா, சேத்துமடை கிராமத்தில் வசிக்கிறார். அக்குபங்சரில் டிப்ளமோ பட்டம் பெற்ற இவர், தற்போது பொள்ளாச்சியில் உள்ள நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் இளங்கலை கணினிப் பயன்பாட்டியல் துறையில் மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறார்.

இவர் ஒரு வளர்ந்து வரும் தமிழ்க் கவிஞராவார், "நிழல் தேடிய போது" என்ற புத்தகத் தொகுப்பில் தன்னுடைய கவிப் பங்களிப்பை அளித்துள்ளார். அவரது தனிப் பணியைத் தவிர, "தமிழுக்கும் அமுது என்று பெயர்" என்ற வெளியீட்டில் இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தமிழ் மீதும், கவிதைகள் மீதும் பெரும் ஆர்வம் கொண்டுள்ளதால், இவர் தனது வரிகள் மூலம் வாழ்க்கை, காதல் மற்றும் மனித அனுபவத்தின் சாரத்தை படம்பிடித்து, வாசகர்களுக்கு அவரது தனித்துவமான, எளிமையான சொல் நடையிலும் புனைகிறார்.

## கவிதைகளில் தவழும் குழந்தை

கவிதை எல்லோருக்கும் விருப்பமான இலக்கிய வடிவம். எல்லோரும் எழுதிப்பார்க்க நினைக்கும் வடிவம்.. எல்லோரும் நின்று , விரும்பிக் கேட்க விரும்பும் வடிவமும் கவிதை தான். எதையும் ஓர் இசைத் தன்மையோடு சொல்லும் போது அது முழுவீச்சில் வாசகனைச் சென்றடைந்துவிடும். கவிதை அதன் காரணமாகவே எளிதில் மனங்களைச் சென்றடைகிறது. கவிதைக்கு வாசகர்கள் அதிகமாக இருப்பது போலவே கவிதை எழுதுபவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. எளிய வடிவம், வரையறைகளற்ற சுதந்திரம், வசீகரிக்கும் அழகு என கவிதை எல்லோரையும் ஈர்க்கும் வடிவமாகவும் இருக்கிறது.

புதிதாக கவிதை எழுத வருபவர்களுக்கென்று தனியாக விதிமுறைகள் இல்லை, பயிற்சிகள் இல்லை ஆனால் கொஞ்ச காலம் எழுதத் தொடங்கியபின் அவர்கள் சமகாலக் கவிதைப் போக்குகளைக் கவனிக்க வேண்டும், தங்களுக்கு முன்னால் எழுதிய கவிதையின் முன்னோடிகளை வாசிக்க வேண்டும்.. இதைத் தொடர்ந்து தவம் போல் செய்தால் அவர்களால் எதிர்காலத்துக்கான கவிதைகளை எழுத முடியும்..

கவிதைகள் காலத்தைக் கடந்து நிற்கக் கூடியவை. நல்ல கவிதைகள் எத்தனை கடற்கோள்கள் தாண்டியும், எவ்வளவு பேரழிவுகளைத் தாண்டியும் நின்று வாழும் வீரியம் பெற்றவை. நல்ல கவிதைகளைக் கண்டடைய நாம் பயணப்பட வேண்டிய தூரம் நீண்டது. வாசிப்பின் வரைபடங்களைக் கொண்டு தான் கண்டடைய முடியும்.

ஒரே ஒரு நல்ல கவிதை, காலம் கடந்தும் கவிஞனின் பெயரை உச்சரிக்கச் செய்தபடியே தன்னை முன்னிறுத்திக்கொண்டு நிற்கும். அந்த ஒரே ஒரு கவிதையை அடைந்து விடும் நோக்கில் தான் ஆயிரக்கணக்கில் இங்கு கவிதைகள் எழுதப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

தமிழ் எனும் மொழிகளின் தாய்மொழியில் யாவும் கவிதைகளாகவே இருந்திருக்கின்றன. எனில் கவிதையின் தொன்மையும் சிறப்பும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய, உணர்ந்துகொள்ள வேண்டிய ஒன்று.

ஒவ்வொரு கவிதையும் வாசகனுக்குள் ஏதாவது ஒன்றை நிகழ்த்த வேண்டும். புன்னகைக்க, கண்ணீர் சிந்தவைக்க, உரிமைக் குரலெழுப்ப, கோபப் பட வைக்க, ரசிக்க, கிறங்க வைக்க என கவிதைகளால் நமக்குள் ரசவாதங்கள் நிகழும். அப்படி நிகழாத கவிதைகளைக் காலம் கணத்தில் கடந்து போய்விடும்.

எல்லாக் கவிதைக்கும் ஒரே முகம் இருப்பதில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முகத்தோடு நிற்கும். ஒரு போதும் கவிதைகள் முகமூடிகளை அணிவதில்லை; விரும்புவதில்லை. கவிதைக்கு போலிமுகம் இருப்பதுமில்லை.

குழந்தைகள் தவழத் தொடங்கும் போதும், நடக்கத் தொடங்கும் போது நாம் அவ்வளவு உற்சாகமாகவும், பெருமிதத்தோடும் கண் இமைக்காமல் பார்த்து ரசிப்போம். மலர் மலர்வதைப் போல, சூரியன் கடல் மட்டத்திலிருந்து உதித்து மேலெழுவதைப் போல, அந்தியில் மேற்திசையில் அதுவே மறைவது போல இயற்கையின் பேரதிசயத்தில் குழந்தைகளும் எப்போதும் முதன்மையான அதிசயம் தாம். அப்படி, கவிதைகளில் யாராவது குழந்தைத் தன்மையோடு தவழ்ந்து வரும் போதும் நாம் அவர்களை தள்ளி ரசிக்க வேண்டும், அள்ளி அணைத்திட வேண்டும். தனது முதல் கவிதைத் தொகுப்பில் கவிஞர் கோகுல்நாத் அப்படி குழந்தை முயற்சிகளோடு அழகான கவிதைகளைப் படைக்கத் தன்னைத் தயார்படுத்தியிருக்கிறார்.

குழந்தையும் அறச்சீற்றம் கொள்ளும் எனவும் தனது கவிதைகளில் நிரூபித்திருக்கிறார்.

புத்தகங்கள் தீண்டப்படாததால் தோற்கிறது!

தீண்டாமை தீண்டப்படுவதாலே தோற்கிறது!

*புத்தகங்களைத் தீண்டாததால் தீண்டாமை நம்மை விட்டு அகல மறுக்கிறது என்கிற சத்தியத்தை தனது கவிதை வரிகளில் கனலென வைத்திருக்கிறார். கல்வி தான் விடுதலை, கல்வியும் வாசிப்பும் அதனூடாக நிகழும் புரிதல்களும் மாபெரும் சமூக மாற்றத்தை நிகழ்த்தும் என்பதற்கு நமது தலைமுறையே வாழும் சாட்சி.*

*பல காதல் கவிதைகளையும், இயற்கையின் வர்ணனைகளையும், காண்கின்ற காட்சிகளையும், உறவுகளையும் என பல பாடுபொருட்களை எழுதிப்பார்த்திருக்கிறார் கோகுல்நாத். கவிதைகளில் தெரியும் சமூக சிந்தனை வரவேற்கத்தக்கது.*

*கோகுல்நாத்தின் கவிதைகள் ஆரம்பகட்ட முயற்சி... தனது முதல் புத்தகத்தைக் கல்லூரி நாட்களிலேயே சாத்தியப்படுத்தியது அவரது விடாமுயற்சியும் தன்னார்வமும்.. சமகாலக் கவிதைகளைத் தேடி வாசிப்பதன் மூலமாக இவரது எழுத்து இன்னும் பலப்படும்... கவிதையின் பாதைகள் புலப்படும்.*

*வாழ்த்துகள்*

*அன்புடன்*

**இரா.பூபாலன்**

*செயலாளர் - பொள்ளாச்சி இலக்கிய வட்டம்*

*98422 75662*

# என்னுரை

அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும் வணக்கம்! நான் கோகுல்நாத், ஒரு கல்லூரி மாணவன். என் பள்ளிப் பருவத்தின் இறுதியில் ஏதோ ஒரு சமயம் திரைப்படப் பாடல்களை ரசிக்கத் தொடங்கினேன். அன்று எழுந்த அழியா சிந்தனை, இப்போது கவிதைகளாகப் பரிணாமம் அடைந்துள்ளது. “எண்ணம் போல் வாழ்க்கை” என்ற வாக்கியம் போல, நம் எண்ணம் தான் வாழ்க்கை என்று உணர்த்தியது இந்தக் கவிதைகள்.

இது எனது முதல் கவிதைத் தொகுப்புப் புத்தகம், எனது பார்வைகளும், எண்ணங்களும், கற்பனைகளும் கவிதைகளாக உருமாறி உள்ளன. இலைகளின் நரம்புகள், ஒரு நுண்ணிய வெளிச்சப்பார்வை கொண்டு பார்த்தால் தான் தெரியும், அது போல ஒவ்வொரு கவிதையிலும், ஏதோ ஒரு கருத்து வெளிச்சப்பார்வைக்குக் காத்திருக்கும்! அதைக் கண்டெடுக்கும் நேரம், சில கவிதைகள் நமை மீட்டெடுக்கும்.

ஒரு கவிதை பொதுவெளியில் ஒரு கவிஞனால் எழுதி வைக்கப்படுகிறது, அந்தக் கவிதை, எழுதிய கண்ணோட்டம், கவியின் சாரம், கவிதையின் நோக்கம், ஏன் ஒரு முற்றுப்புள்ளியைக் கூட அழகாகச் சுமந்து செல்லும். அது ஒரு வாசகரின் கைகளை இறுகப் பற்றிக்கொள்ளும் வேளையில், அதன் சுமைகளை எளிமையாக இறக்கி வைக்கத் தவறியதில்லை. ஒரு கவிதை எவ்வளவு எளிமையாக உள்ளதோ, அத்தனை வேகமாய் அந்த அழகிய சுமை சென்றடையும். அந்தப் பற்றுதல் கவிஞனுக்கும் வாசகருக்கும் ஒரு நல்ல ஒத்திசைவைக் கொண்டுவரும். பிறகு அந்த வாசகர் அந்தக் நூலைக் கொண்டாடுகிறார், பிறர்க்கு அறிமுகப்படுத்துகிறார். அது போல இந்தப் புத்தகத்தில் சில கவிதைகள் உங்களுக்கு ஏதேனும் எண்ணங்களை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

*இந்த நேரத்தில், என் முதுகெலும்பாகவும், எல்லா இடத்திலும் உறுதுணையாக இருக்கும் என் அப்பா பாலராமநாதன் அம்மா ஜெயந்தி அவர்களை மகிழ்வுடன் நினைத்துக் கொள்கிறேன். இந்த நூலை வெளியிட உறுதுணையாக இருந்த அண்ணன் கவிஞர் இரா. பூபாலன் மற்றும் கவிஞர் க. அம்சப்ரியா அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். எனது முயற்சியில் பெரிதும் மகிழ்ச்சி அடையும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களை நினைவில் கொள்கிறேன்.*

*இந்தப் புத்தகத்தை வாசித்துவிட்டு பிடித்த வரியை அல்லது பிடிக்காத வரியைப் பகிருங்கள்...உங்கள் பின்னூட்டத்திற்குக் காத்திருக்கின்றன என் காதுகள்!*

*நன்றி,*

**பா. கோகுல்நாத்**

*7339397567*

*bgokulnath567@gmail.com*



## என்னைப் பற்றி சில வரிகள்!

*என் வருகைக்குக் காத்திருந்த நேரமது,*
*தேர்வு முடிவை எதிர்பார்க்கும் மாணவன் போல்,*
*கைகள் கட்டிய தந்தையின் நடை, ஒருபக்கம்!*
*ஆண் குழந்தையா? பெண் குழந்தையா?*
*உறவுகளின் பட்டிமன்றம் மறுபக்கம்!*

*அலறல் சத்தமே அரைமணி நேரம் கேட்கும் அறை!*
*பஞ்சனை மேல் பூவுக்குப் பிரசவம்...இல்லை பூகம்பம்!*
*அவளைப் பாடாய்ப்படுத்தி, நான் வந்த வழி,*
*அவளுக்குத் தானே தெரியும்!*

*வெள்ளை சட்டை அணிந்த இருவர்,*
*வெள்ளை மனம் கொண்டு, பக்குவமாய் இழுத்தனர்!*
*சிவப்புக் கம்பளம் விரித்து வரவில்லை! - அவளின்,*
*சிவப்புக் குருதியை உடலில் தேய்த்து வந்தேன்!*

*போர் ஜெயித்த வீரனின் கர்ஜனை போல்,*
*என் முதல் கர்ஜனை... கண்ணீரில்லா அழுகை!*
*நான் ஒருவன் அழுது கொண்டிருக்க,*
*அறையே சிரித்த தருணம் அது...*
*இருந்தாலும், பல கண்களின்*
*ஆனந்தக் கண்ணீரால், உடல் கழுவப்பட்டேன்!*

*இரும்புகளை எளிதாகத் தூக்கிய தந்தையின் கை,*
*முதன்முதலில் என்னைச் சுமக்க நடுங்கியது!*
*காயத்திலும் கலங்காத தந்தையின் கண்கள்,*
*என்னை வரவேற்க சில துளிகளைத் தெளித்தது!*

*மூக்கு அவன் அம்மா மாறியே இருக்கு!*
*முழி அவன் அப்பா மாறியே இருக்கு!*
*என்ற உறவினரின் சலசலப்புகள் கேட்காமல்,*
*கர்வம் நிறைந்த கண்ணீர் கொண்டு,*
*எனக்கென சேமிப்புத் திட்டத்தைத் தொடங்குகிறார்!*

*பத்து மாதம் பாதுகாப்பாய்,*
*பல்சுவை உணவுகளை எனக்களித்தாள்!*
*தொப்புள் கொடியை அறுத்து விட்டு,*
*பாலை மட்டும் பரிசளித்தாள்!*

*பெயர் சூட்டும் விழாவில்,*
*“கோ” எனத் தொடங்கும் பெயர் வையுங்கள்!*
*கோமகனாக வருவான்! என்ற ஜோசியன் சொல்கேட்டு,*
*“கோகுல்நாத்” என ரகசியமாகக் காதில் சொன்ன பெயர்!,*
*இன்று என்னைப் பற்றி நான் எழுதும் கவிதைக்கு,*
*தலைப்பாகும் என்று எண்ணவில்லை!!!*

◎

# தோற்கிறது...

*மணிமுள்ளும், நொடி முள்ளிடம் தோற்கிறது!*
*சிறு நெல்லும் சட்டிக்கு வரத் தோற்கிறது!*
*சில காதலும் நிறத்தினால் தோற்கிறது!*
*பல மோதலும் விடையின்றித் தோற்கிறது!*
*சட்டம் பல பணக்காரர்கள் முன் தோற்கிறது!*
*பட்டம் பணத்தின் முன் மட்டுமே தோற்கிறது!*
*அரசியல், அரசியல்வாதிகளிடம் தோற்கிறது!*
*தேர்தல் மக்களின் விரல் நுனியில் தோற்கிறது!*
*சில புத்தகங்கள் தீண்டப்படாததால் தோற்கிறது!*
*தீண்டாமை தீண்டப்படுவதாலே தோற்கிறது!*

## மழை!

*விண்வெளியில் வானிலை மாற்றமோ!*
*இடிச் சத்தத்துடன், மின்னல் வெளிச்சத்துடன்,*
*கார்மேகங்கள் சூழ்ந்து அழைக்க!*
*வீழ்வதற்கென்றே பிறந்த துளிகள்,*
*பிறரை வாழ வைக்க,*
*பூமி நோக்கி வருகிறது... மழையாய்!*

## தமிழன்!

*சீறிவரும் காளையின் திமிலைப் பிடித்தான்!*
*தூணிலும் துரும்பிலும் தமிழை வடித்தான்!*
*பழந்தமிழ் வரலாற்றைச் சிலையாய்ப் படைத்தான்!*
*முத்தமிழும் முற்றறிந்து முச்சங்கம் வளர்த்தான்!*
*வீரம் கூடத் தலைவணங்கும், அவன் பெருமை கண்டு!*
*பயிர் செய்து பசி அறுத்தான், தன் குருதி கொண்டு!*
*அவன் கதையை, அலையில் பொரித்தாலும் அழியாது!*
*இப்பூவுலகில் அவன் மேல் பழி யாது!*

## நீ நடந்தால்!

*இப்புவி மீது நீ நடந்தால்!*
*பூமாலையும் மலர் தூவும்!*
*பூச்செடிகளும் தலைவணங்கும்!*
*கல்லும் மண்ணும் கவிபாடும்!*
*வண்டுகளோ வாத்தியம் இசைக்கும்!*
*மழை நீரோ உன்னைத் தீண்ட நினைக்கும்!*
*அடிநீரும் ஆர்ப்பரிக்கும்!*
*மேகம் மேலிருந்து காத்திருக்கும்!*
*காற்று உன் இதயம் புகுமா எனப் பார்த்திருக்கும்!*
*புல்லும் புன்னகைக்கும்!*
*நானோ அதை ரசித்திருப்பேன்!!!*

## கர்வம் கொள் பெண்ணே!

*நதி முதல் நட்சத்திரம் வரை,*
*உன் பெயர் என கர்வம் கொள்!*
*உன் அன்பு ஒரு நாள் இல்லாவிட்டால்,*
*உலகம் அழியும் என கர்வம் கொள்!*
*உன்னை வர்ணிக்காத கவிஞன்,*
*எவரும் இல்லை என கர்வம் கொள்!*
*ஆதி முதல் அந்தம் வரை,*
*உன் ஆதிக்கம் என கர்வம் கொள்!*
*கள்ளிப்பால் கொடுத்தவன், இன்று,*
*நாள் எடுத்துக் கொண்டாடுகிறான் என கர்வம் கொள்!*
*உலகின் உயர்ந்த பதவி,*
*உனது என கர்வம் கொள்!*
*அந்தப் பதவிக்கு நீ தான்,*
*ஏற்றவள் என கர்வம் கொள்!*
*கர்வம் கொள் பெண்ணே!*
*கர்வம் கொள்...!*

◎

## வறுமையின் விளையாட்டு!

*அழுக்கு உடம்பும்,*
*அரை கிழிந்த ஆடையும்,*
*காலணியில்லாத பாதமும்,*
*காப்புக் காய்த்த கைகளும்,*
*சுருங்கிய முகமும்,*
*சூம்பிப்போன வயிறும்,*
*ஒருவாரப் பசியும்,*
*அறிந்திடாத பல ருசியும்,*
*மகிழ்ச்சி இல்லாப் புன்னகையும்,*
*கதறல் இல்லாக் கவலையும்,*
*வறுமையின் விளையாட்டுக்களோ!!!*

◎

## கருவறையின் கதகதப்பில் இக்கவிஞன்!

*கடல் அலையும் இடம்மாறும்,*
*அவள் கண் பார்க்க,*
*நிலநடுக்கமும் தடுமாறும்!*
*மண்ணரிப்பும் மனம் வீசும்,*
*அவள் அன்பினிலே,*
*சுனாமியும் சுகமாகும்!*
*புயலும் புன்னகைக்கும்,*
*அவள் அரவணைப்பினிலே,*
*கொரோனாவும் குழந்தையாகும்..!*

## தண்ணீர்!

*நீ சேமிக்கத் தகுந்த துளிகள்!*
*நீ ஓடப் பல வழிகள்!*
*உனைக் கொட்டித் தீர்க்கும் வானம்!*
*நீ தாகம் தீர்க்கும் பானம்!*
*இருந்தும் அடைத்து விட்டனர்,*
*நெகிழிக் குப்பியில்...*
*உனை விற்கின்றனர்,*
*விற்கத் தகாத விலையில்!*

◎

## இதயச் சுற்றுலா!

*தென்றல் காற்று வானம் தழுவி,*
*அழகிய மேகக் கூட்டத்தை நகர்த்தி,*
*மலை மீது தவழச் செய்து,*
*மரங்களின் இலைகள் இடையே புகுந்து,*
*மிதமான வேகத்தில் எனது தேகம் உரசி,*
*மூச்சுக் குழாய் வழியில் செல்கிறது,*
*என் இதயத்தைத் தேடி!!!*

## மற[ர]வாத மனிதன்!

*மண்ணுக்குத் துணை, வற்றாத சுனை,*
*ஆபத்திற்கு மருந்து, கண்ணுக்கு விருந்து,*
*பறவையின் பாடசாலை, தேனிக்கு தங்கும் விடுதி,*
*குரங்குக்குக் குட்டிப் பூங்கா, எறும்புகளின் எவரெஸ்ட் சிகரம்,*
*இலைகளின் இசை, கிளைகளின் கிளிஞ்சல் சத்தம்,*
*இன்னிசைக்குக் குழல், என்றும் நீங்காத நிழல்,*
*புன்னகைக்கும் பூக்கள், தீஞ்சாறு சிந்தும் கனிகள்,*
*காவலுக்குக் கதவு, காற்று வர சன்னல்,*
*நீருக்குப் படகு, நீந்திச் செல்லத் துடுப்பு...*
*இத்தனையும் செய்துவிட்டு,*
*மனிதக் கோடாரிக்கும் இரையாகிறது!*
*மதவாத மனிதன் போய்,*
*மரவாத மனிதன் வேண்டும்,*
*உன்னை மறவாத மனிதன் வேண்டும்!!!*

◎

## மறந்தோம்!

*விண்வெளியைத் தொட்ட நாம்,*
*ஆழ்துளைக் கிணற்றை மூட மறந்தோம்!*
*பாரதத் தாயை வணங்கும் நாம்,*
*நிலத்திற்காக நம் சொந்தங்களை மறந்தோம்!*
*மது விற்பனையைப் பட்டியலிட்ட நாம்,*
*காய்கறி விலையைத் தீர்மானிக்க மறந்தோம்!*
*தண்ணீருக்காகப் போராட்டம் செய்த நாம்,*
*அந்தப் புனித நீரைச் சேமிக்க மறந்தோம்!*
*செயற்கை உணவுகளை உண்ணும் நாம்,*
*விவசாயம் என்பதையே மறந்தோம்!*
*செயற்கைக் காற்றைச் சுவாசிக்கும் நாம்,*
*அதனைச் சுத்தப்படுத்த மறந்தோம்!*
*விரல் மை பூசி வாக்களிக்கும் நாம்,*
*ஓட்டுக்குப் பணம் பெறக்கூடாது என்பதை மறந்தோம்!*
*ஜாதி மதத்தால் வேறுபட்ட நாம்,*
*இந்தியனாய் ஒன்றானோம் என்பதை மறந்தோம்!*
*பிற மொழிகளைப் பேசும் நாம்,*
*தாய் மொழியைப் பிழையின்றிப் பேச மறந்தோம்!*
*இவ்வரிகளைப் படிக்கும் நாம்,*
*இத்தனை இன்னல்கள் இருப்பதையே மறந்தோம்!*

◎

## காரணம் என்ன?

*உனக்கு அழகு சேர்க்க எதற்கடி அணி,*
*உன்னை மட்டும் வர்ணிப்பதே என் முழு நேரப் பணி,*
*நீயோ கால் முளைத்த திகட்டாத கனி,*
*உன் கவி பாடும் கொலுசுக்குள் நானும் ஒரு மணி!*

*நீ செதுக்கிய நட்சத்திரங்களின் துகளா?*
*அல்லது வளைந்த வானவில்லின் வண்ண நகலா?*
*நீ அந்த வானில் இருந்தால் நாளெல்லாம் பகலா?*
*இத்தனை வரிகளுக்கும் காரணம் தான், காதலா!?*

◎

## நீ!!!

*உளி படாத சிலை நீ!*
*அண்டத்தில் அதிகபட்ச விலை நீ!*
*என்னை அறிந்த கணினி!*
*என்னை உண்ட கனி நீ!*

*இரட்டைக் கால் பூ நீ!*
*தின்னத் திகட்டாத தேன் நீ!*
*என்னையே சுற்றி வரும் தேனீ!*
*அவ்வப்போது என்னை கவனி!*

◎

## வாடகை வீட்டிற்குச் செல்வோமா?

*காற்று வரா சன்னல்,*
*ஆயுட்காலம் அறியாக் கதவுகள்,*
*துருவை ஆடையாய் அணிந்த தாழ்ப்பாள்,*
*குழி விழுந்த தரை,*
*குடிபெயரும் கரப்பான்கள்,*
*வரவேற்கத் தெரியாத வாசல்,*
*பெயர்ந்து வரும் சுவரின் வண்ணம்,*
*அரைகுறை கழுவலோடு கழிப்பறை,*
*பாசத்தோடு அழைக்கும் குளியலறை,*
*விருந்தாளி வந்தால் விலையேற்றம்,*
*விலையில் இல்லை மனமாற்றம்,*
*வாடகை வீட்டில் வாழ்பவர்க்கு தெரியாது!*
*மாதத் தொடக்கத்தில் எதுவும் புரியாது!!!*

## விழிகளின் அபிஷேகம்!

*சாயங்கள் அழியும் முன்னே,*
*காயங்கள் ஆனதடி!*
*பள்ளம் விழுந்த உள்ளம் ஏனோ,*
*பதைபதைத்துப் போனதடி!*

*துடிக்கின்ற இதயம் இங்கே,*
*தடுமாறிப் போகுதடி!*
*நான் நுழைந்த இதயம் ஏனோ,*
*சிறைச்சாலை ஆகுதடி!*

*பொல்லாத உறவுக்கு!*
*பொருந்தாத உபதேசம்!*
*விடைபெற்ற உறவுக்கு...*
*விழி செய்யும் அபிஷேகம்!!!*

◎

## சற்றே மாறுபட்ட!

*இலைகளின் நரம்புக்குள்ளும்,*
*உயரழுத்த ரத்த ஓட்டம்!*
*உதிர்ந்த சருகில் உள்ளது,*
*கலை இழந்த மனவாட்டம்!*
*நிலமும் கரம் கொடுத்தால்,*
*சருகும் உரமாகும்!*
*உரமும் உதவி செய்தால்,*
*சிறு விதையும் செடியாகும்!*

*பறவையின் இறகினிலே,*
*ஒற்றை வண்ண ஓவியம்!*
*பிரிந்த சிறகும் தீட்டும்,*
*பல வண்ணக் காவியம்!*
*வீழ்ந்து சிறகும் நிரப்பும்,*
*ஒரு சிட்டுக்குருவியின் கூட்டை!*
*பறவைகளும் படிக்க மறந்தது,*
*கட்டிடக்கலையின் ஏட்டை...!*

◎

## அதிகாலை வேளை!

*அதிகாலை வேளை,*
*மெல்லத் தொடங்கும் குயில் பாட்டு,*
*படர்ந்து கிடக்கும் பால் வண்ண மேகம்,*
*போக்குவரத்து நெரிசல் இல்லா வானம்,*
*சூரியக்கதிர்களின் சூடான முத்தம்,*
*குளிர்சாதனம் இல்லாக் குளிர் காற்று,*
*உதடுகளின் சுருக்கத்திற்கு ஒரு கோப்பைத் தேநீர்,*
*உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள என்னுடன் நீ..!*

◎

# திண்ணைக் கிழவி!

*நரச்ச தலையோட,*
*நடுங்குற தலையோட,*
*சாரப்பாம்பா நாக்கு பேசும்!*
*பொக்க வாயில வெத்தல வாசம் வீசும்..!*

*திண்ணையில அரிசி பொடச்சு,*
*நாளெல்லாம் கழிஞ்சு போச்சு,*
*புரளி பேச ஆள் இருக்கா?*
*தேடிப் பாக்கும் சின்ன மனசு..!*

*அவ உலக்கையால இடிக்கையில,*
*வெத்தலையும் நசுங்கிப் போகும்,*
*அவ முந்தான முடிச்சுல தான்,*
*பத்துருவா கசங்கிப் போகும்..!*

*தள்ளாடுற வயசுல தான்,*
*சொல்லாம தல ஆடுது!*
*காதோர தண்டட்டியும்,*
*அழகாகக் கவி பாடுது..!*

*சுருக்குப்பையில தான்,*
*சரித்திரமும் பொதஞ்சு இருக்கு!*
*ஒத்த வரி சொன்னாலும்,*
*பத்து அர்த்தம் அதிலிருக்கு..!*

*எம்பதத் தாண்டிப் போனாலும்,*
*எட்டு வைக்க மறக்கவில்ல!*
*யார் என்ன சொன்னாலும்,*
*அவ அனுபவத்தில கொரச்சல் இல்ல..!*

*இந்த ஊருக்கே மூத்தவன்னாலும்,*
*இவ தானே பேரழகி!*
*வேறென்ன சொல்ல முடியும்,*
*இவதானே திண்ணைக் கிழவி!!!*

## இப்படிக்கு நான்!

*சிந்திக் கிடக்கும் சொற்களின் சீர்திருத்தவாதி!*
*பொய்களை இரைப்பதில் அரசியல்வாதி!*
*புதைந்து கிடக்கும் உவமைகளின் தொல்லியல் நிபுணன்!*
*நெய்யப்படும் வார்த்தைகளுக்கு நெசவாளன்!!!*

*பேனா முனைக்குப் பிரசவம் பார்க்கும் மருத்துவன்!*
*வரிகளின் வடிவமைப்புக்குப் பொறியாளன்!*
*வெள்ளைக் காகிதங்களின் காதலன்!*
*இப்படிக்கு நான் கவிஞன்!!!*

◎

# பி(இ)றப்பு

*பிறப்பு எனும் வேலை கிடைத்து,*
*வயது எனும் வருமானத்தோடு,*
*வருடா வருடம் வருமானம் பெறுக,*
*வேலையின் இளமைக் காலத்தில்,*
*வேலைச் சுமை அதிகரிக்க,*
*மனக்குழப்பங்களின் மல்யுத்தச் சண்டையில்,*
*மனமும் மூளையும் மழுங்கிப் போக,*
*ஓய்வூதிம் என்னும் ஊக்கத்தொகையை,*
*முதுமைக் காலம் பெற்றுக்கொள்ள,*
*சில நாட்களில் பதவி உயர்வு கிடைக்கிறது!*
*இறப்பு என்ற பெயரில்!!!*

◎

## இமை சாயும் இரவு!

*கருப்புக் கம்பளத்தில் அழிக்க முடியாத கோலப்புள்ளிகள்,*
*கம்பளத்தின் மத்தியில் பாதி கடித்த பால்வண்ண லட்டு,*
*மிதமான வேகத்தில் வாசனை கலந்த வாடைக் காற்று,*
*குருட்டுப் பறவைகளின் கூர்மையான பார்வை,*
*இறக்கை முளைத்த இசையமைப்பாளர்களின்,*
*இன்னிசைக் கச்சேரியில்,*
*முதலில் மயங்கினேன்...பின்பு உறங்கினேன்!*
*அன்று ஓர் இரவில்!!!*

◎

## கண்களுக்கு விருந்தளி!

*உனக்காகக் காத்திருந்த நேரம்,*
*காலடியிலும் முட்கள் முளைக்கிறது!*
*உணர்ச்சி இல்லா பூமிப் பந்தும்,*
*என் கண்ணீரை வாவென்று அழைக்கிறது!*
*அவ்வப்போது என் முன் வந்து,*
*ஏழைக் கண்களுக்கு விருந்தளி,*
*உன்னால் காயப்பட்ட இதயத்திற்கு,*
*வாய் மொழி பேசி மருந்தளி!!!*

◎

## ஹைக்கூ

*“புகை பிடிக்காதே” என்ற பலகைக்கு கீழ்,*
*அணையாமல் எரியும்*
*சிகரட் துண்டு!*

*“மதுவிலக்கு அமலாக்கத் துறை” அலுவலகம் அருகில்,*
*புதிதாகத் திறக்கப்படவுள்ளது!*
*டாஸ்மாக் கடை...*

*தான் சொல்ல வந்ததை,*
*காட்டிவிட்டு அழிகிறது,*
*சாக் பீஸ் துண்டு!*

◎

## ஹைக்கூ

*துர்நாற்றத்தையும் அனுமதிக்கிறது,*
*என்றும் மூடப்படாத,*
*சன்னல் கதவு!*

*வேர்த்து விறுவிறுத்து நடக்கிறார்,*
*தன் மூச்சுக் காற்றை விற்கும்,*
*பலூன் வியாபாரி!*

*பேனாவும் கிரீடம் கழட்டி தலைகுனிகிறது,*
*பாகம் பிரிக்கும் நிகழ்ச்சியில்,*
*பங்கேற்ற பாவத்திற்கு!*

◎

## ஹைக்கூ

*மரங்களுக்கு ஆதங்கம்,*
*தன் வாரிசுகளான, கதவு சன்னல்களில்,*
*இலைகள் முளைக்கவில்லை என்று!*

*விவசாய நிலத்தின், வருங்கால நிலை!*
*சதுர அடிக் கணக்கில் நடப்பட்ட,*
*ஓரடிக் கற்கள்!*

*உலகின் அதிபுத்திசாலிகளை,*
*சுமக்கிறோம் என கர்வம் கொள்கிறது,*
*புத்தக அலமாரி!*

◎

# இரும்பு இதயம்!

*இவன் கால்களும் சுத்தும்,*
*காது கிழிக்கும் சத்தம்,*
*நிதம் தருவேன் முத்தம்,*
*என் தனிமைப் பயணத்தின் மொத்தம்!*

*கரும்புகை பிடிப்பான்,*
*எரிபொருள் குடிப்பான்,*
*நான் ஓட்ட சிரிப்பான்,*
*இரும்பு இதயம் கொண்டு துடிப்பான்!!!*

◎

## மரணம்... (என் தாத்தாவின் மரணம்)

*நீ மூச்சுக் காத்த நிறுத்தும் போது,*
*மூச்சடைச்சுப் போனோமே,*
*ஒரு நிமிஷம் பொறுக்கவில்ல,*
*உன் உசுரக் காணோமே...*

*ஒத்த வார்த்தை சொல்லலயே,*
*ஓராயிரம் தடவை கேட்டோமே!*
*கூடவே வருவோம்னு,*
*சொல்லாம போனீரோ!*

*உடம்போட சேர்ந்து போன,*
*பெத்த புள்ள ஏங்கிடும்னு,*
*உயிரை மட்டும் எடுத்துக்கிட்டு,*
*உடல் விட்டுப் போனீரோ!*

*குளிர் தாங்கா உடம்பை இங்க,*
*ஐஸ் பெட்டியில வைக்கயில,*
*நடுக்கம் ஆகும் கைகள் அங்கே,*
*அடக்கமாகி போனதென்ன!*

*ரோசா இதழ் பாத போட்டு,*
*எட்டுகாலு தாங்கிப் போக,*
*சந்தன மால வாசம் வீசும்,*
*ஊரெல்லாம் உன் புகழ் பேசும்!*

*பால் வடியும் முகத்துல தான்,*
*விறகுக் கட்ட எரிக்கயில,*
*எவ்வளவு சூடு தாங்கிருப்ப,*
*எத்தன முற ஏங்கிருப்ப..!*

*சாம்பலாகப் போன பின்னும்,*
*கரிக்கட்டையா ஆன பின்னும்,*
*காத்தோடு கலந்திருப்ப...*
*வானம் எங்கும் நிறைஞ்சிருப்ப...*

*நீ விதச்ச விதை ஒன்னு,*
*விருட்சமாக வளர்ந்து இருக்கு,*
*அது உன் நினைவை ஏந்தி நிற்கும்,*
*உன் புகழ தாங்கி நிற்கும்!!!*

## எந்திரமா? மந்திரமா?

*கடலான அறிவியலின் புதுக்கரையா?*
*வயதான பூமிப்பந்தின், அடுத்த தலைமுறையா?*
*சிலிக்கான் அட்டைகளின் அணிவகுப்பா? இது,*
*மனித மிருகமிடையே பிரிக்கப்பட்ட புதுப்பகுப்பா?*
*மைக்ரான் துகளில் உருவான மனித மூளையா?*
*இயற்பியலுக்கும் உயிரியலுக்கும் உள்ள இடைச் சாலையா?*
*எலக்ட்ரான்கள் பயணம் செய்யும் எந்திரமா? இது,*
*விஞ்ஞானிகளின் சிந்தையில் விளைந்த மந்திரமா..?*

## காதல் முதல்! கைபேசி வரை!

*உன் அதிகாலைக் குறுஞ்செய்தியில்,*
*விடியுதடி என் இரவு!*
*நாள் முழுக்கக் கைபேசியில்,*
*தொடருதடி நம் உறவு!*
*நம் பொன்னான நினைவுகளோ,*
*சேமிப்பகத்தில் பதியுதடி!*
*கைபேசியில் உன் குரலோ,*
*மெல்லிசையாய் ஒலிக்குதடி!*
*தொடு திரையின் முகப்பினிலே,*
*எப்போதும் உந்தன் முகம்!*
*பார்த்துக் கொண்டே இருப்பதனாலே,*
*குளிருதடி எந்தன் அகம்!*
*உனை நேரில் பார்க்கும் நேரம் தான் எப்போது?*
*காணொளி அழைப்பிற்கு வா! இப்போது!!!*

◎

## பேருந்துக் காதல்!

*அரசுப் பேருந்தின் கிழிந்த இருக்கையில்,*
*இறகு முளைக்காத புல்புல் பறவை!*
*ஓட்டுநர்க்குப் பின்னே அமர்ந்து,*
*என் இதயத்தை ஓட்டிச் செல்கிறாள்!*
*நடத்துனர் தரும் பயணச்சீட்டாய்,*
*நானும் கிழிந்தே போகிறேன்!*
*அவள் சில்லறையைத் தேடும் போது,*
*அதனுள் நான் சில்லறையாக மாறக் கூடாதா?*
*துருப்பிடித்த கம்பிகள் இடையில்,*
*ஒரு காதல் தான் முகிழ்கிறதே!*
*கழுகுப் பார்வை கொண்டு,*
*உன்னை மட்டும் கவனிக்கிறேன்!*
*இறங்கும் இடம் வந்தும்,*
*வெறும் இதயத்தோடு பயணிக்கிறேன்..!*

◎

# காதலில் இல்லை!

*உன் கண்களை,*
*கைது செய்யக் கட்டளையிடுகிறேன்!*
*என்னைப் பார்வையிலே தாக்கினாய் அல்லவா!*
*காவல் நிலைய வாசலிலே,*
*கால் கடுக்க நிற்கின்றேன்!*
*காணாமல் போன இதயத்தைக்,*
*கண்டுபிடித்துத் தரக் கோரி ஒரு விண்ணப்பம்..!*
*வீதி உலா சென்றாலும்,*
*வீணாய்ப் போன கண்களோ,*
*உன்னை மட்டும் தேடுகிறதே!!*
*குற்றம் செய்தவள் நீயல்லவா...*
*இப்போது நான் வழக்கறிஞரை வைத்து,*
*வழக்குகளை தொடுக்கிறேன்!*
*வஞ்சியவள் என் நெஞ்சை மட்டும்,*
*திருடிய குற்றத்திற்காக,*
*நீதிமன்றக் கூண்டுக்குள்ளே,*
*நிற்க வைத்தேன் உன்னை!*
*நல்லவேளை! நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டன,*
*இல்லையென்றால், உன் அழகில்*
*நீதி தவறாமல் அல்லவா!*
*வழக்கில் எப்படியோ வெற்றி அடைந்தேன்!*
*வழக்கில் மட்டும்தான்...*
*காதலில் இல்லை!!!*

◎

## மயக்கம்

*கருப்புத் தார்சாலையில்,*
*அவள் யார் என்று சொல்லாமல்,*
*போர் செய்து போகிறாள்!*
*நாராகிப் போகிறேன்... சுக்குநூறாகிறேன்!*

*மௌனமான மொழிகள் எல்லாம்!*
*தெளிவாகப் புரிகிறதே!*
*கண்ஜாடை செய்கை எல்லாம்,*
*அழகாகத் தெரிகிறதே!*

*மையிட்ட கண்ணாலே,*
*என்னை மையலிடப் பார்க்கிறாள்!*
*தயங்காத என் மனமும், சற்று,*
*மயங்கித்தான் போகிறதே!!!*

◎

# அந்தாதி

*கருவறைக் குழந்தைக்கு,*
*வகுப்பறையில் முன்பதிவு!*
*நடக்காத குழந்தைக்கு,*
*நடக்கப் போவதைக் கூறும் ஒரு கூட்டம்!*
*பெயர் சூட்டும் விழாவில்,*
*மதம் சூட்டும் மாந்தர்கள்!*
*மகாகவி பாடலைக் கூறிவிட்டு,*
*சாதிச் சான்றிதழ் கேட்கும் ஆசான்கள்!*
*வெளிப்புற நிறத்தை வைத்து,*
*தரம் பிரிக்கும் தரம் மிக்கவர்கள்!*
*செய்யும் பணியை வைத்து,*
*திறனறியும் திறமைசாலிகள்!*
*அரைஅடித் தாள்களின் எண்ணிக்கையில்,*
*தகுதி காணும் தகுதி மிக்கவர்கள்!*
*கடைசி காலத்தில் அன்பை மட்டும்,*
*அடைக்கலமாய் கேட்கும் வயது!*
*இருந்து என்ன செய்ய?*
*இந்த எலும்பும் தோலும்,*
*கல்லறைக்கு இலவசமாகத் தானே வழங்கப்படுகிறது!!!*

◎

## நானும் காதலிக்கத் தொடங்கி விட்டேனோ!

*மௌனமான மொழிகளும் கற்றுக் கொண்டேன்!*
*கண்ணசைவுகளில் பட்டம் பெற்றேன்!*
*கடிகாரத்தைக் கடிந்து கொண்டேன்!*
*கட்டுப்பாட்டு வளையத்தில் சிக்கிக் கொண்டேன்!*
*சுதந்திரத்தைத் தொலைத்தேன்!*
*பயத்தால் திகைத்தேன்!*
*பதுங்கிப் பதுங்கி நடந்தேன்!*
*பரபரப்பாய் அலைந்தேன்!*
*பாதி உடல் மெலிந்தேன்!*
*குறுஞ்செய்திக்காகக் காத்திருந்தேன்!*
*கனவும் வருமா எனப் பார்த்திருந்தேன்!*
*தனிமையிலும் பேசினேன்!*
*கண்ணாடியைப் பார்த்து ஏசினேன்!*
*ஆடைகளும் கலைந்தன!*
*நிம்மதியும் குலைந்தது!*
*தூக்கமும் தொலைந்தது!*
*ஒருவேளை நானும்,*
*காதலிக்கத் தொடங்கிவிட்டேனோ!!!*

## வறுமை!

*இருவரின் ஆசையில்,*
*இப்புவியில் பிறந்துவிட்டேன்!*
*பெற்றவளின் வலியோடு,*
*வழி மாறி வந்துவிட்டேன்!*
*ஈரம் இல்லாத இதயத்தில்,*
*குருதி மட்டும் பாய்கிறதே!*
*ஈகை இல்லா உலகத்தில்,*
*என் வயிறும் காய்கிறதே!*
*கையேந்தி வாழும் நிலை,*
*அப்படியே செல்கின்றேன்!*
*வறுமை எனும் ஆடை போர்த்தி,*
*அம்மணமாய் அலைகின்றேன்..!*

◎

## நடுத்தர நாயகன்!

*இருபதுக்கும் முப்பதுக்கும்,*
*போர் நடக்கும் கடைத்தெரு!*
*கிழிந்த செருப்போடு,*
*சில காலம் ஓடும் கால்கள்!*
*பணம் புழங்காத மணிப்பர்சில்,*
*முனை மடங்கிய விநாயகர் படம்!*
*இதுவரை நல்ல நேரமே காட்டாத,*
*தங்கமுலாம் பூசிய கைக்கடிகாரம்!*
*சட்டை பொத்தானின் ராஜினாமாக் கடிதத்தை,*
*ஏற்றுக்கொண்டு பணியமர்கிறது பின்னூசி!*
*பல நேரம் நிம்மதி அளிக்கிறது,*
*ரேஷன் அட்டைக்குக் கிடைத்த ஆறுதல் பரிசு!*
*அடகுக் கடைக்கு அடிக்கடி விருந்தாளியாகும்,*
*மனைவியின் அரைப்பவுன் சங்கிலி!*
*தன் ஐந்தடி மகனுக்கு,*
*அரை டிக்கெட்டுக்கு ஆசைப்படும்,*
*பெற்றோர்கள் இருப்பதும்,*
*இயல்பு தானே!!!*

## விருப்பமில்லை!

*சிரித்து விடாதே!*
*அருங்காட்சியக முத்துக்கள்,*
*அம்பலம் ஆவதில் எனக்கு விருப்பமில்லை!*

*தலை சாய்க்காதே!*
*மற்றொரு பைசா கோபுரம்,*
*சாய்வதில் எனக்கு விருப்பமில்லை!*

*நகம் வெட்டாதே!*
*பிறை நிலா ஒன்று,*
*தரையில் விழ எனக்கு விருப்பமில்லை!*

*ஓர விழியால் பார்க்காதே!*
*என் இதயம் தொலைந்து போவதில்,*
*எனக்குத் துளியும் விருப்பமில்லை!*

## கசக்கும் உண்மை!

*உறவுகள் என்னும் ஊடகம்,*
*நம் உருவம் அறிவதில்லை,*
*நிழல்கள் நடத்தும் நாடகம்,*
*நிஜங்கள் தெரிவதில்லை!*

*தூரத்து சொந்தம் தான்,*
*தூரமாக இருக்கும் வரை!*
*எல்லாமே பந்தம் தான்,*
*அதனாலே தந்தது சிறை!*

*தீயிடம் செல்லும் வரை தான்,*
*இந்தத் தீண்டாமை தொடரும்!*
*சாம்பலாய்ப் போன பின்தான்,*
*இங்கு பாசங்கள் படரும்!!!*

◎

# தங்கச்சி

*ஓயாத சண்டைகள்,*
*ஒரு நாளும் பேசாமல் இல்லை!*
*அளவு கடந்த அக்கறை,*
*வெளிக்காட்டாத நாளே இல்லை!*

*காரணமில்லா சண்டை பற்றி,*
*அந்தக் கைபேசிக்குத் தெரியும்!*
*அவள் அக்கறையின் ஆழம் பற்றி,*
*அவள் அனுப்பும் குறுஞ்செய்தியில் புரியும்!*

*நிம்மதி என்று கேட்டிருப்பேன்!*
*தொல்லையாய் அவளே வந்திடுவாள்!*
*நிம்மதி அள்ளித் தந்துவிட்டு,*
*அன்புத் தொல்லை என்று கூறிடுவாள்!*

*“தங்கச்சி” என்று அழைத்துவிட்டால்,*
*“அண்ணனே” என்று அழைத்திடுவாள்!*
*“பாப்பா” என்று கூறிவிட்டால்,*
*பாச மழையைப் பொழிந்திடுவாள்!*

*இரத்த பந்தமும் இல்லை,*
*சொந்த உறவும் இல்லை,*
*உறவுகளின் அன்பை விட,*
*அவளின் அன்பு, சற்றே அதிகம் தான்!!!*

◎

## யானை!

*அசைந்து வரும் காட்டைப் போல,*
*பெரிதாய் வளர்ந்த குழந்தை நீ!*
*காட்டு மரம் முறித்தாலும்,*
*ஒற்றைப் பாகனின் காதலன் நீ!*

*விவரம் போதவில்லை உனக்கு!*
*உன் பாதம் பட்ட இடமெல்லாம்,,*
*பட்டா போட்டு விற்கப்பட்டுள்ளது!*
*கால் வைத்து விடாதே!*
*காலனாக மாறுகிறது, கரண்ட் கம்பிகள்!*

*மதம் பிடிப்பது உனக்கா? இல்லை அவர்களுக்கா?*
*நீ சிலையாக இருப்பதனாலே,*
*கூடமும் பத்தியும் காட்டப்படுகிறது!*
*நேரிலே வந்து விடாதே!*
*அணுகுண்டும் நாட்டுவெடியும் காத்திருக்கிறது!!!*

## காதலில் சதி!

*வழக்கமான சந்தை வீதி...*
*உன்னைக் காண இரு கண்களும் காத்திருக்கிறது,*
*உந்தன் கையிடையில் ஊசலாடும்,*
*பையாகக் கூடாதா என்ற எண்ணம்!*
*உன் கையாளும் கைக்குட்டை,*
*கை தவறி விழும் நேரம்!*
*அதனை கைப்பற்றிய வீரன் நான்...*
*கைக்குட்டையை தரும் போது,*
*காதலையும் தரலாம் என்று,*
*அருகே வந்தேன்!*
*நன்றி அண்ணா என்று சொல்லி,*
*நடந்தே சென்று விட்டாய்!!!*

# இயல்பான வாழ்க்கை!

*தலையும் கழுத்தும் அரைமணிநேரம்,*
*அடமானம் வைக்கப்படுகிறது,*
*சவரத் தொழிலாளியிடம்!*
*வருங்காலத்தை நினைவு படுத்திக்*
*கொண்டே இருக்கிறார்,*
*பால் ஊற்றும் பால்காரர்!*
*மனக்குப்பைகளைத் தேக்கிக் கொண்டு,*
*தெருக்குப்பைகளை அள்ளிச் செல்கிறார்,*
*துப்பரவுத் தொழிலாளி!*
*அதிகாலையே தன்,*
*தொடர் கொலைகளைத் தொடர்கிறார்,*
*கசாப்புக் கடைக்காரர்!*
*இடியோ மழையோ,*
*தான் வளர்க்கும் தத்துப் பிள்ளைகளை,*
*காணச் செல்கிறார் விவசாயி!*
*நல்ல காகிதத்தை,*
*கிழித்துத் தருவதையே,*
*பணியாகக் கொண்ட நடத்துனரும்!*
*நம் இயல்பான வாழ்வில், அடக்கம் தானே!!!*

◎

## தொலைதூரக் காதல்!

*உன்னை ஒரு முறை நேரில் காண,*
*கண்களைக் கொண்டு காத்திருக்கிறேன்!*
*கன்னங்களிலே பூத்திருக்கிறேன்!*

*மனப்பாட உரையாடல்,*
*கணக்கில்லாக் குறுஞ்செய்தி,*
*விருந்தளிக்கும் உன் நினைவுகள்!*
*உயிரளிக்கும் உணர்வுகள்!*
*குரல் கேட்கா நொடிகள்!*

*காத்திருப்பது கடினம் தான்,*
*ஆனால் உனக்காகக் காத்திருப்பது,*
*ஒருவகை இனிமை தான்!!!*

## கற்பனையில் மலர்ந்த காதல்!

*கற்பனையில் மலர்ந்த காதல்,*
*கனவுகளில் தொடரும் மோதல்!*
*முகம் பார்க்க எண்ணினேன்,*
*முகக் கவசமும் எதிரியாகிறதே!!*

*காகிதத்தில் கவி எழுத,*
*காகிதப் பூக்களாய் என் மனமும்,*
*காற்றடிக்கும் திசை மாறி,*
*உன் பின்னே செல்கிறதே!!*

*உன் அழகை வர்ணிக்க,*
*வான் நீலம் போதாதே!*
*கண்மை கொஞ்சம் தந்திடு,*
*கம்பனாக மாறிடுவேன்!!!*

## தொடரும் வண்டி!

*தண்டவாளத் தடத்தின் மீது,*
*புகைப்பிடிக்கும் புல்லாங்குழல்!*
*"ஓ" வென்ற ஓசைக்குப் பின்,*
*நகர்ந்து கொண்டே ராக தாளங்கள்!*
*நேர்கொண்ட பாதையில் சென்றாலும்,*
*அடிக்கடி அழகான வளைவு சுழிவு!*
*நெடுந்தூரப் பயணத்தில்,*
*வந்து போகும் உறவினராய்ப் பயணிகள்!!*
*இந்தப் பெட்டிகளும் தகுதி பார்க்கிறதே!*

*குளிர்காற்று வாசத்தில் சிலர்!*
*கழிவறை நாற்றத்தில் சிலர்!*
*இளைப்பிடமாக எண்ணும் சிலர்!*
*பிழைப்பிடமாக எண்ணும் சிலர்!*
*பாரபட்சத்தோடு இப்பெட்டிகள்,*
*நம்மைப் பார்த்தாலும்!*
*ஒற்றைச் சிவப்பொளிக்கு,*
*அடங்கி நிற்கிறது...*
*மற்றொரு பயணத்தின் தொடக்கமாக!!!*

## போற போக்குல ஒரு காதல்!

*போற போக்குல ஒத்தப் பார்வை,*
*கண்ணாலே சானம் புடிச்சியே!*
*கூரில்லா அட்டகத்தியும்,*
*என்னக் கீறிவிட்டுப் போகுதடி!*

*போற போக்குல ஒத்த சொல்லு,*
*பேசிப்புட்டு நீ போனா!*
*நெஞ்சத் துளைக்கும் மெசின் கன்னும்,*
*சக்கர பன்னா மாறுதடி!*

*போற போக்குல ஒத்த மூச்சு,*
*விட்டுப்புட்டு நீ போனா!*
*பாலைவனமான என் உடம்பும்,*
*பஞ்சு மிட்டாயாப் பறக்குதடி!*

*போற போக்குல ஒத்தக் காதல்,*
*சொல்லிபுட்டு நீ போனா!*
*பித்துப் பிடிச்ச என் மனசும்,*
*செத்து செத்துப் பொழைக்குதடி!!!*

◎

## நவீனப் பிச்சை!

*நிறைவேறாத வாக்குறுதிகள்,*
*மனம் மயக்கும் பொய்யுரைகள்...*
*செய்ததைச் சொல்லிக்காட்டும் ஒருவர்,*
*செய்ததில் குறைகாணும் ஒருவர்,*
*ஒற்றை மதத்தைத் தாக்கியடிக்கும் ஒரு கூட்டம்,*
*ஒற்றை மதத்தைத் தூக்கிப்பிடிக்கும் ஒரு கூட்டம்,*
*இனக் காப்பாளர்கள் ஒரு பக்கம்,*
*இனம் சொல்லத் தயங்குபவர் ஒரு பக்கம்,*
*இத்தனை பிரிவுகள் இருந்தாலும்,*
*தேர்தல் நாள் வந்துவிடட்டும்,*
*பணம் கொடுத்து, வாக்கு கேட்கும்,*
*நவீனப் பிச்சை தொடங்கிவிடும்!!!*

◎

## பேனா!

*குழந்தையிடம் கிறுக்கலாக,*
*மாணவனிடம் எழுத்துகளாக,*
*ஆசிரியரிடம் மதிப்பெண்களாக,*
*அப்பாவிடம் கையொப்பமாக,*
*தச்சனிடம் அளவுகளாக,*
*கொலைகாரனிடம் கத்தியாக,*
*அருங்காட்சியத்தில் அரிய பொருளாக,*
*மருத்துவரிடம் மருந்துச் சீட்டாக,*
*கதையாளரிடம் வசனங்களாக,*
*ஓவியனிடம் கலையாக,*
*காதலனிடம் கடிதமாக,*
*காதலியிடம் பதில் கடிதமாக,*
*என்னிடம்...?*
*இதோ ஓர் கவிதையாக!!!*

◎

## சின்னவயசுக்குப் போவோமா!

*சின்ன வயசு நினைவெல்லாம்,*
*வந்து வந்து போகுதே!*
*பஞ்சு போல மனசெல்லாம்,*
*இளசாக மாறுதே!*

*கருப்பு வெள்ளை டீவிக்குள்ள,*
*கலரான ஞாபகங்கள்!*
*கடைசி வரை மணி காட்டாத,*
*ஜவ்வு மிட்டாய் வாட்சு!*

*எட்டி எட்டிப் பார்த்து முடிச்ச,*
*டெண்ட்டுகொட்டா சினிமாப் படம்!*
*மழை பெஞ்சு ஓஞ்ச பின்னே,*
*கப்பலாகும் நோட்டு புக்கு!*

*காலு கொஞ்சம் எட்டலயே,*
*கொரங்கு பெடல் சைக்கிள் சவாரி!*
*வீதி எல்லாம் சுத்தித் திரிய,*
*கூட வரும் நொங்கு வண்டி!*

*பள்ளிக்கூடத்துக்குத் துணையாக,*
*என் பாரம் தூக்குற மஞ்சப்பை!*
*கேட்க மட்டும் சலிச்சதில்ல,*
*பாட்டி சொன்ன பேய்க் கதை!*

*அரிசி பருப்பு அள்ளிப் போய்,*
*கூடி செஞ்ச கூட்டாஞ்சோறு!*
*விளையாடியே தொலைஞ்சு போச்சு,*
*நொண்டி, கில்லி, பல்லாங்குழி!*

*அன்பு நேசம் பாசம் இல்ல,*
*காசு தானே பஞ்சம்!*
*வறுமையிலே வாழ்ந்தாலும்,*
*குளிர்ந்திருக்கு நெஞ்சம்!!!*

## ந(கர)ம்!

*அடுக்குமாடி மண் புற்றில்,*
*எறும்பைப் போல மனிதர்கள்!*
*வனவிலங்குக் காப்பகத்தில்,*
*தண்ணீர் ஊற்றி வளர்க்கப்படும் மரங்கள்!*
*கரும்புகை மண்டலத்தில்,*
*புழுவாய் வாடும் மனிதர்கள்!*
*ஒரு அடிக்கற்களின் ஒற்றை வரி உரை,*
*“விவசாய நிலங்கள் விற்பனைக்கு”!*
*வாகனச் சக்கரங்களால், அதிகம் அளக்கப்படுகிறது,*
*எல்லை தெரியாத தார்ச் சாலைகள்!*
*வர்ணக்கோட்பாடுகளைப் பின்பற்றக் கூறுகிறது,*
*நெடுஞ்சாலைப் போக்குவரத்து விளக்கு!*
*அழையா விருந்தினராய், கிராம அழகை,*
*கண்டு செல்லும், மாநகரத் தொடர்வண்டிகள்!*
*வசதிகள் பல இருந்தும்,*
*நகரம் சில நேரம் நரகமாகவே இருக்கிறது!!!*

◎

## மின்சாரமா நீ!

*மின்சாரமாய் நீ இருந்தால்,*
*மின்னணுசாதனம் நான் தானே!*
*உன் துணை இல்லாமல்,*
*நான் இங்கு வாழ்வேனா?*

*மின் தடை போட்டதனால்,*
*மின் விசிறி சுற்றவில்லை!*
*நீ தடை போட்டாலும்,*
*நான் உன்னைச் சுற்றுகிறேன்...*
*உன் விசிறி நானல்லவா!!!*

*தொலைக்காட்சி விளம்பரமாய்,*
*என்னை நீயும் மாற்றிவிட்டாய்!*
*காதல் என்னும் வலையினிலே!*
*என்னை ஏனடி மாட்டிவிட்டாய்!*

*மின்விளக்காய் எனை நீயும்,*
*வெளிச்சப் பார்வை பார்த்துப் போ!*
*தெருவிளக்காய் நான் இங்கே,*
*தனிமையிலே நிற்கின்றேன்!!*

◎

## அசராதே பெண்ணே!

*பெண்ணொருவள் வந்து நின்றால்,*
*ஏளனமாய்ப் பார்த்த இனம்,*
*அண்ணார்ந்து பார்க்கிறதே,*
*இவள் சென்ற உயரம் கண்டு!*

*மண் என்று நினைத்தானோ?*
*என்றும் காலடியில் கிடக்க!*
*பொன்னாகி விட்டாள் - அவள்,*
*பெண் என்னும் பெயர் கொண்டு!*

*கேள்விகள் கேட்கவில்லை,*
*தீக்குளிக்கச் சொன்னான் சீதையை!*
*கேள்விகளை வேள்வியாக்கு,*
*கண்ணகி போல் சிலை உனக்கு!*

*அழகியலை வகுத்துவிட்டு,*
*அளவியலையும் வகுத்துவிட்டான்,*
*வர்ணனைகள் பல,*
*வஞ்சனையின் சாயலில்!*

*வர்ணனை எல்லாம் உந்தன் தடை!*
*அசராதே பெண்ணே, நையப் புடை!*

◎

## வாழ்க்கையின் வரிகள்!

*முதல் மூச்சு உந்தன் அழுகையோடு!*
*கடைசி மூச்சு மற்றவரின் அழுகையோடு!*
*கண்ணீரும் காய்ந்து விடும்!*
*அன்பும் கூட தேய்ந்து விடும்!*
*நிலையில்லா உலகினிலே, நீயோ ஆறடி நிழல்!*
*மனிதனாகப் பிறந்துவிட்டாய்,*
*மன்றாடித் தான் ஆக வேண்டும்!*
*காலப்பிடியில் நின்றுவிட்டாய்,*
*காலனைப் பார்த்தே தீர வேண்டும்!*
*நல்லார் யார்? பொல்லார் யார்?*
*எல்லோரும் இங்கே சமம் தானே!*
*இரு தரம் என்று பிரித்தாலும்,*
*அனைவரும் நுண்ணுயிர்க்கு இரை தானே!!!*

## என் இதயம் விற்பனைக்கு!

*சந்தைக் கடை வீதியிலே!*
*சித்தன்னவாசல் ஓவியம் ஒன்று,*
*உயிர் பெற்று எழுந்து வந்து,*
*என் முன்னே நடக்கிறதே!*

*நீ நடக்கும் பாதையிலே,*
*உதிர்ந்து கிடக்கும் பூவெல்லாம்!*
*உயிர் பெற்று மரமேறி,*
*மீண்டும் ஒரு முறை பூக்கிறதே!*

*கண்ணிமைகள் மூடவில்லை,*
*காலும் கூட நகரவில்லை,*
*உன்னை மட்டும் பார்க்கிறேன்,*
*மனதளவில் மட்டும் தோற்கிறேன்!*

*என் இதயம் விற்பனைக்கு!*
*விலையும் கூடக் காதல்தான்!*
*என்றும் காலாவதி ஆகாது!*
*காலம் வரை உனக்குத்தான்!!!*

## சுகம் தானே!

*மணல் குவியலில் நீர் ஊற்றி,*
*மணல் விளக்கு செய்வதும்!*
*பாட்டுப்பாடும் பொம்மை கைப்பேசியில்,*
*உறவினர்க்கு அழைப்பதும்!*
*கார்ட்டூன் கதாப்பாத்திரம் போல,*
*செய்கைகள் செய்வதும்!*
*மயிலிறகின் குட்டிக்காக,*
*புத்தகத்தில் அடைகாப்பதும்!*
*குப்பைக்கு போக வேண்டிய,*
*மிட்டாய்க் காகிதத்தை சேமிப்பதும்!*
*கணக்கு ஆசிரியர்,*
*ஒரே ஒரு நாள் விடுப்பு எடுப்பதும்!*
*எண்ணிலடங்கா நட்சத்திரங்களை,*
*விரல் விட்டு எண்ணுவதும்!*
*எங்கோ செல்லும் விமானத்திற்கு,*
*வீட்டில் இருந்தே கையசைப்பதும்!*
*ஒரு வகை சுகம் தானே..!*

## மீண்டும் ஓர் பிறவி!

*கண்கள் என்னும் காவல் கொண்டு,*
*பார்வை என்ற விலங்குகளால்,*
*கையோடு சேர்த்து வைத்து,*
*என் மனதையும் கட்டுகிறாய்...*

*உன்னைப் பார்த்த மயிலொன்று,*
*பொறாமைப்பட்டுப் பறந்து வந்து,*
*அவசரமாகக் கேட்கிறது!*
*அழகு நிலையத்தின் முகவரி...*

*ஒற்றை புருவத் தூக்கலிலே,*
*ஓரமாக சாய்ந்தவன் நான்,*
*உன் அன்பான வார்த்தையிலே,*
*அரையடி வளர்ந்தவன் நான்...*

*ஓரப் பார்வை போதுமடி,*
*பிறவிப் பலனை அடைந்திடுவேன்!*
*ஒற்றைக் குறுநகை காட்டிவிடு,*
*மீண்டும் ஒரு முறை பிறந்திடுவேன்...!*

◎

## ஹைக்கூ!

*போட்டிப் போட்டுக் கொண்டு,*
*நாளை நகர்த்திவிட்டுச் செல்கிறது,*
*கடிகார முட்கள்!*

❍

*பிண ஊர்வலத்தில் வீசப்பட்ட பூக்கள்,*
*உணவாகிறது... பதினாறாம் நாள்,*
*காரியத்தில் உணவாகப்போகும் ஆடுகளுக்கு..!*

❍

*பறவைகளுக்கு விசிறி விட்டு,*
*பணிவிடை செய்கிறது,*
*மரங்களின் இலைகள்!*

◎

*நிர்பந்தப்படுத்தி*
*நிர்வாணம் ஆக்கப்படுகின்றன!*
*கசாப்புக் கடை கூண்டுக்கோழிகள்!*

❍

*பல குடிநீர்க் குழாய்களுக்கு,*
*தாகம் எடுக்கின்றன...*
*தண்ணீரின்றி வியர்வை வருகிறது,*
*சொட்டு சொட்டாய்!!!*

❍

*நான் இரவில் நிலவை,*
*அதிகம் ரசிக்கிறேனாம்,*
*மேகங்கள் கண்டித்து, அடிக்கடி,*
*மறைத்துக் கொள்கின்றன!!!*

◎

*தன்னை ஈன்ற நிலம்,*
*நனையக் கூடாதென்று!*
*பேராசையுடன் குடைப்பிடிக்கிறது,*
*காளான் மொட்டுக்கள்...*

❍

*வானுக்கும் பூமிக்கும் போர்,*
*வானம் தண்ணீர்த் தோட்டாக்களை,*
*கொண்டு சுடுகிறது... மழையாய்!*

❍

*உலக உயிர்கள் செய்த பாவம்!*
*உயிர் வாழ வைத்த ஒருவரை,*
*பார்க்காமலே போகின்றோம்! - காற்று*

◎

*மலைகள் மீது இருந்து,*
*தண்ணீர் செய்யும்,*
*தற்கொலை கூட அழகு தான்!*
*- அருவி*

❍

*இலையில் தூங்கும் நீர்த்துளிக்கு,*
*ஆயுட்காலம் அறிவிக்கப்படாமல் முடிகிறது,*
*சூரியன் வந்தவுடன்!!!*

❍

*ஆறுகால் எறும்புக்கு,*
*ஏறும் இடமெல்லாம்,*
*எவரெஸ்ட் சிகரமாம்!*

*பூக்களின் தவத்தைக் கலைக்கின்றன,*
*தேனை யாசகமாகக் கேட்கும்,*
*தேனீக்கள்!!!*

❍

*வானில் கருப்புப் படையினரின்,*
*போருக்கான முழக்கம்!!!*
*இல்லை! இல்லை!*
*சோறுக்கான முழக்கம்...வந்தது காக்கைகள்..!*

❍

*நான் கேட்பதை எல்லாம்,*
*காசைப் பெற்றுக்கொண்டு தருகிறார்!*
*கடவுள் இல்லை.. கடைக்காரர்!*

◎

*தேங்கிய தண்ணீர்க் குட்டைக்கு,*
*மதிப்புக் கூடுகிறது!*
*நாய்களும் பறவைகளும்*
*நீர் அருந்துகிறது!*

❍

*கடவுளின் சிந்தனை அதிகமாகிறது!*
*ஆத்திகனுக்கு இல்லை,*
*நாத்திகனுக்கு!!!*

❍

*யாசகமே மொழியாகிறது,*
*கருவறை வாசலிலும்!*
*கோவில் வாசலிலும்!!!*

◎

*பேருந்தில் அமர்ந்தவர்க்கு,*
*தரப்படாத ஒன்று!*
*நிற்பவர்க்கு இலவசமாகிறது!*
*கால் வலி!!!*

❍

*இருள் வானம்!*
*பயந்திருந்த மக்களுக்கு,*
*ஒளியின் மொழியில் உரையாடுகிறது நிலா!*

◎

*மச்சாவதாரக் கதைகேட்ட குழந்தை!*
*வணங்கிவிட்டுச் செல்கிறது...*
*மீன்கடையில் உள்ள மீன்களை!!!*

❍

*தன் இனத்தை அவளே விற்கிறாள்!*
*ஆம்... பூக்கள் விற்கும்*
*பூக்காரி அவள்!!!*

◎

# இயற்கை இயற்கையாகவே அழகு தான்!

*கட்டுப்பாட்டு வளையம் வைத்து,*
*கட்டுகோப்பாய் வாழும் விலங்குகள்!*
*உயர்ந்த மொழிப் பிரிவுகள் இன்றி,*
*உல்லாசமாய்ப் பாடித் திரியும் பறவைகள்!*
*காற்றளித்து இலை உதிர்த்து,*
*நிழல் தந்து பணி செய்யும் மரங்கள்!*
*முன்னோர் வகுத்த வழியினிலே,*
*கூரான பாறைகளை கூலாங்கள் ஆக்கி செல்லும் ஆறுகள்!*
*வீழ்வதற்கென்றே பிறந்த துளிகளின்,*
*பூமி நோக்கிய பயணம், மழை!*
*நின்றவனை வீழ்த்தாமலும், விதைத்தவனை*
*ஒருபடி உயர்த்தியும் வைக்கிறது, நிலம்!*
*மனித செயல்களைப் பார்த்து, அடிக்கடி வெளியே வந்து*
*கண்டித்து உள்செல்கிறது, கடலலைகள்!*
*பறிக்க முடியாப் பழங்களாகவே இருக்கிறது,*
*விண்ணில் சந்திர சூரிய நட்சத்திரங்கள்!*
*வேடம் புனைந்து ஒப்பனை செய்யும் மனிதர்களை விட,*
*இயற்கையாகவே! இயக்கை அழகு தான்!!!*

## மண் காப்போம்!

*அந்தாதி இல்லாத பாதைகளைக் கொண்டு,*
*ஆடாமல் அசையாமல் மனிதனைத் தாங்கி,*
*மக்கும் குப்பையை மக்க வைத்து,*
*மக்காத குப்பையை விட்டு வைத்து,*
*நீர் போக வழிகளை வகுத்தளித்து,*
*நீ போக வழிகளைப் பகிர்ந்தளித்து,*
*தன்னை மாசுபடுத்தும் மனிதர்களை,*
*பாசமாகப் பாதுகாக்கிறது..!*

*பல லட்சம் கோடி வருடங்கள்,*
*வயதான மண்ணை விட்டு,*
*குழிதோண்டித் தேடுகின்றனர்!*
*பழமை எதுவென்றறியாமல்...*

*விதைகளுக்குக் கருவறையாக!*
*மனிதனுக்குப் பிணவறையாக,*
*மேடு பள்ளம் இருந்தாலும்,*
*பிரிவின்றிக் காக்கும் நிலமும், மண்ணும்,*
*நம் தாய் தானே!*

◎

## காதல் காவியம்

*போக்குவரத்து மின்விளக்காய்,*
*சிவப்பை மட்டுமே காட்டுகிறாய்!*
*பச்சை விளக்கைக் காட்டிவிடு,*
*என் இச்சை தீர்ந்துவிடும்!*

*கருவிழியின் நாட்டியத்தில்,*
*புத்தி கெட்டுப் போனவன் நான்!*
*புருவம் தூக்கிப் பார்த்ததாலே,*
*நாதியற்று ஆனவன் நான்!*

*என் கண்களுக்குப் பதவி உயர்வு!*
*தூரத்தில் நின்று பார்த்த உன்னை,*
*அருகில் நின்று பார்க்கச் சொன்னேன்!*
*கண்களுக்கும் தைரியமில்லை,*
*அதற்கும் கூட வேர்க்கிறதே!*

*உன் பார்வை பட்டாலே,*
*காகிதம் கூட ஓவியமாகும்!*
*சரி என்று சொல்லிவிடு,*
*என் ஒரு மனக் காதலும் காவியமாகும்...!*

◎

## பிரியாவிடை!

*வானம் போல் விரிந்திருக்கும் வாழ்க்கையில்,*
*கல்லூரி நாட்கள் ஒரு சிறு மேகம்!*
*நகர்ந்து கொண்டே அதன் காலம் முடிகிறது!*
*வண்ண வண்ண நினைவெல்லாம்,*
*மேகம் பிரசவிக்கும் வானவில்லாய்..!*

*பல நட்புகளை சேகரித்தோம்!*
*சில காதல்களை ஆதரித்தோம்!*
*ஆசானிடம் கற்றறிந்தோம்!*
*கணினிகளை தொட்டுணர்ந்தோம்!*

*ஒற்றுமை கலந்த மதிய உணவு,*
*வருங்காலம் பற்றிய சிறு கனவு,*
*அவ்வப்போது பழைய நினைவு,*
*இப்போது இவற்றின் முடிவு!*

*அறிவைத்தேடிய வாழ்க்கைப் பயணத்தில்,*
*ஆங்காங்கே இருந்த நாம்,*
*பறவைகள் போல ஒன்றானோம்...*
*வேடந்தாங்கலாய் நம் கல்லூரி!*

*உதட்டோர சிரிப்போடும்,*
*இமைகளில் தேங்கும் கண்ணீரோடும்,*
*கை குலுக்கி, கட்டியணைத்து வழியனுப்ப,*
*மனம் இங்கே மறுக்கிறதே!*

*காலம் காலை வாரி விட,*
*விதி எல்லாம் சதி செய்ய,*
*விடுதலையில் விருப்பம் இல்லாத நாம்,*
*பிரியாவிடை நிகழ்ச்சியில் அங்கமாக!!!*

*இழப்புகள் எல்லாம் பெரிதாகும்,*
*இழப்புகள் நடக்கும் வரை!*
*விழியோரம் நிற்கும் துளிகள்,*
*நினைவுகளை தாங்கிக் கொள்ளட்டும்,*
*வருங்கால நினைவுகளோடு,*
*உங்கள் கையேட்டில் ஏந்திக்கொள்ளட்டும்!!!*

◎

## தாய்மை!

*தாய்மை தான்,*
*எல்லாமே தாய்மை தான்!*

*குளவிகள் தன் புழுக்களை,*
*தன் சொந்த மண் வீட்டில்,*
*மறைத்து வைப்பதும் தாய்மை தான்!*

*மரத்தின் விதைகள் விழுந்து முளைக்க,*
*மரம் தன் நிழலை,*
*தானமாகத் தருவதும் தாய்மை தான்!*

*தேடிச் சென்று உணவு எடுத்து வந்து,*
*ஊட்டிவிட்டு, பறவைகளாய் பறக்கச் சொல்லி,*
*தள்ளிவிடுவதும் தாய்மை தான்!*

*தானுண்ட தானியங்கள், முட்டையாக மாறியபின்,*
*அது உடைய, அதன் மேல் தவமிருக்கும்,*
*கோழிகளின் எண்ணமும் தாய்மை தான்!*

*தான் கண்ட சக்கரைக்கட்டி,*
*அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற,*
*எறும்புகளின் அறிவும் தாய்மை தான்!*

*துள்ளிக்குதிக்கும் கங்காரு குட்டியை,*
*தன் வயிற்றுப் பையில் போட்டு,*
*பாதுகாத்து வாழ்வதும் தாய்மை தான்!*

*கூரான பற்கள் கொண்ட சிங்கம்,*
*தன் குட்டிக்குக் குருதி வராமல் கழுத்தில் கடிக்கும்,*
*நிதானமும் தாய்மை தான்!*

*உடலில் காயம் பட்டால்,*
*கண்ணீரால் சரி செய்வதும்,*
*மனதில் காயம் என்றால்,*
*ஆறுதல் கூறி சரி செய்வதும், தாய்மை தான்!*

*குருதிக் கலப்பில்லாத உறவான,*
*நண்பன் தரும் அன்பும் அடைக்கலமும்,*
*ஒருவகை தாய்மை தான்..!!!*

◎

## ஆண்!

*ஆறடி உருவத்தில்,*
*மறைந்திருக்கும் குழந்தை,*
*உணர்வுகளை வெளிப்படுத்தாததால்,*
*கல் நெஞ்சன் என்று செல்லப் பெயர்!*

*அரும்பாய் வளர்ந்த தாடி மீசை!*
*கொம்பு உள்ள மானைப் போல்,*
*தோகை உள்ள மயிலைப் போல்,*
*அழகை சுமக்கும் ஆண்மகன் இவன்!*

*இளவட்ட வயதினிலே, இன்றியமையா அறிவு!*
*காதல் கொஞ்சம், கல்வி கொஞ்சம்,*
*கடமைகள் கொஞ்சம், கனவுகள் கொஞ்சம்,*
*ஏந்தி வாழும் மகன் ஒருபக்கம்!*

*நான்கு அங்குல மீசையோடு,*
*சீவப்படாத தலைமுடியோடு,*
*மோதிரம் அணியா விரல்களிலே,*
*காப்பு மட்டும் காய்த்திருக்கும்...*

*சிறிதளவு காசையும்,*
*பெரிதளவு பாசத்தையும்,*
*தந்துவிட்டு, எதிர்பார்க்காமல் இருக்கும்,*
*அப்பா எனும் பதவி, மறுபக்கம்...*

*அன்பை மட்டும் அகத்தில் கொண்டு,*
*வெளிப்படையாகக் காட்டத் தெரியாமல்,*
*சிரிப்பையும் கூட சிந்தித்து செலவிடும்,*
*ஆண்கள் வர்கமே தனி அழகுதான்!!!*

## மழை காலச் செய்திகள்!

*இன்றைய முக்கியச் செய்திகள்!*
*குடைக்கம்பிகளின் குளியல் காலம் ஆரம்பம்!*

*சூரியனை எதிர்த்து,*
*கருப்பு உடை உடுத்தி,*
*மேகங்களின் தொடர் தர்ணா!*

*தன் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததென,*
*நிவாரண நிதியாக, கூரை கேட்கும்,*
*பறவையின் மனு நிராகரிப்பு!*

*மண் வாசனையைக் காற்றில்*
*கலக்கிய நிலத்தைப் பற்றி,*
*மூக்குகளிடம் பரபரப்புப் புகார்!*

*துடுப்பின்றி மிதந்து செல்கிறது,*
*ஓலைக்குடிசைகள்... மாடி வீடுகள்,*
*லஞ்சம் கொடுத்திருக்கலாம் என சந்தேகம்!*

*மழைக்காலக் கூட்டத் தொடர்,*
*ஏரி, குளம், ஆறு... பேச்சுவார்த்தை நடத்தும்,*
*என தீர்மானம்!*

*குருவிகளின் இசைக்கச்சேரி தற்காலிகமாக நிறுத்தம்,*
*தண்ணீர்த் துளிகள் தரையில்,*
*தாளம் போடும் என எதிர்பார்ப்பு!*

*இப்பெருமழையை சமாளிக்க,*
*ஜன்னலோர இருக்கையும்,*
*முழுக்கோப்பை தேனீரும் போதுமென,*
*வானியல் ஆய்வு மையம் கருத்து!!!*

## கல்வி!

*மனப்பாடம் செய்வதா கல்வி?*
*மனதை திடமாக செய்வது தான் கல்வி!*
*கற்றறிதல் மட்டுமா கல்வி?*
*கற்றதைக் கடமையாக்குவதே கல்வி!*
*விற்பனைப் பொருளா கல்வி?*
*இலவசமாய் விற்றாலும், விலைமதிப்பில்லாதது கல்வி!*
*ஏடுகள் புரட்டுவதா கல்வி?*
*ஏடுகளை ஏணியாக்கிப் பயணிப்பதே கல்வி!*
*புத்தகப் புழுவாவதா கல்வி?*
*புதிய அகம் பெற்று வண்ணத்துப்பூச்சியாய் பறப்பதே கல்வி!*
*மதிப்பெண் பெறுவதா கல்வி?*
*மதிக்கத்தக்கவனாக வாழ்தல் தான் கல்வி!*
*தேர்வு எழுதுவது மட்டுமா கல்வி?*
*தேர்ந்த அறிவைப் பெறுவது தான் கல்வி!*
*அறிவைச் சேர்ப்பது மட்டுமா கல்வி?*
*அறிவளித்த ஆசானை மதிப்பதும் கல்வி!*
*வீழும் மழைத்துளியா கல்வி?*
*வீழ்ந்தாலும் விதையாகி முளைப்பதே கல்வி!*
*முளைத்து மட்டும் நிற்பதா கல்வி?*
*மரமாகி மற்றவர்க்கும் பயனாவதே கல்வி!!!*

◎

## பூக்கள்!

*காதலிலே கைமாறும்,*
*மங்கையர் தம் தலையேறும்,*
*கடைக்காரர் கையில் விளையாடும்,*
*பண்டிகை நாட்களில் விலையேறும்!!!*
*கூந்தல் அருவியை மெருகூட்டும்,*
*கருவறைக் கடவுளை அழகூட்டும்,*
*தேனீக்களை அழைத்து விருந்தூட்டும்,*
*ரசிக்க மட்டும் செய்து எனை வாட்டும்!*

*திருமணத்தில் மாலையாகும்,*
*வரவேற்றுத் தூவினால் வாழ்த்தாகும்,*
*மனிதர்க்கு, செடிகள் தரும் வரமாகும்,*
*தீண்டாமல் விடப்பட்டவை, செடிகளுக்கே உரமாகும்!*
*பிணவறை வரை வாசம் வீசும்,*
*மணம் என்ற ஒற்றைப் பாதையில் பேசும்!*
*ஒரே காலில் நின்று, தவம் செய்யும்,*
*அழகைக் கொண்டே எனைக் கொய்யும்...!*

## காதல் வளர்ந்தது அக்கணமே!

*நட்சத்திரம் செய்யும் விளம்பரமே!*
*அவள், விசித்திரமான கலவரமே!*
*கற்பனைக் கெட்டா நிலவரமே! - அவளை,*
*மனதில் நினைத்தால் மழை வருமே!*

*பூக்களில் இருப்பது சிறு மணமே!*
*அவள், சிகையளவில்லை நறுமணமே!*
*அழகின் மறுபெயர் மயிலினமே! - அவளை,*
*மயிலொன்று பார்த்தால் கிலி வருமே!*

*சிந்தையில் விளைந்த மந்திரமே!*
*அவள் செய்கைகள் எல்லாம் தந்திரமே!*
*பிரம்மன் வரைந்த சித்திரமே - அவளை,*
*என் இமைக்குள் வைப்பேன் பத்திரமே!*

*கண்கள் பார்த்தது ஒருதரமே!*
*அவள், தலைக்கனம் இல்லா இலக்கணமே!*
*காதல் வளர்ந்தது அக்கணமே - அவளை,*
*என் கவியில் வைத்தேன் இக்கணமே!!!*

# அவளுக்கு ஒரு பூட்டு

*பார்வை என்னும் தூண்டில் கொண்டு,*
*பக்குவமாய்த் தூக்கிவிட்டாய்!*
*பாவம் இந்தச் சிறுவனை,*
*பாவலனாய் மாறிவிட்டாய்!*

*காதல் என்னும் ஆயுதம் கொண்டு,*
*கற்பனையைத் தூண்டிவிட்டாய்!*
*கடிதங்கள் ஏதுமின்றி,*
*காதோரம் காதலை சொல்லி விட்டாய்!*

*மௌனத்தில் பாசை பேசி,*
*என் செவிகளைத் திறந்துவிட்டாய்!*
*சிறகு முளைக்காப் பறவை என்னை,*
*வானுயரப் பறக்க விட்டாய்!*

*ஐந்தடிக் கவிதை உனக்கு,*
*பல வரிகளைத் தீட்டிவிட்டேன்!*
*கனவென்று தெரிந்தும் கூட,*
*அன்பை எனக்குள் பூட்டிவிட்டேன்!!!*

◎

## ஆசிரியர் ஓர் சிற்பி!

*எண்ணங்களை ஏர் ஆக்கி,*
*சிந்தனையை விதையாக்கி,*
*குற்றம் என்னும் களை எடுத்து,*
*அறிவை அறுவடை செய்யும்,*
*எம் ஆசிரியர் ஓர் உழவன்!*

*செறிவான நூல் வைத்து,*
*மாணவர் மனதில் அதனைத் தைத்து,*
*சமுதாயம் கேட்கும் வண்ணம் தெளித்து,*
*வாழ்க்கையின் வரிகளை தறி கொண்டு நெய்யும்,*
*எம் ஆசிரியர் ஓர் நெசவாளன்!*

*கல்வி என்னும் அடிவாரம் போட்டு,*
*ஒழுக்கம் என்னும் கற்களை அடுக்கி,*
*அன்பும் கண்டிப்பும் ஒரு சேரக் கலந்து,*
*மாணவரை அசையா கட்டிடமாக்கும்,*
*எம் ஆசிரியர் ஓர் பொறியாளன்!*

*இருந்தாலும்,*
*பல நுட்பமான ஆசிரியரின் செயல்களை,*
*இந்த கவிதைக்குள் தேட வேண்டாம்!*
*வகுப்பறையிடம் கேட்டுப் பாருங்கள்!*
*அங்கிருக்கும் மேசையிடம் கேட்டுப் பாருங்கள்!*
*உடைத்தெறியப்பட்ட சாக்பீஸிடம் கேட்டுப் பாருங்கள்!*
*நான்கு பக்க சுவர்களிடம் கேட்டுப் பாருங்கள்!*
*புத்தகங்களின் பக்கங்களை புரட்டிப் பாருங்கள்!*

*சிந்திய கண்ணீரும் வியர்வையும்,*
*மாணவனின் வாழ்வை சுத்தப்படுத்தும்,*
*என்று இவைகளுக்கு தெரியும்!!!*

*உளி ஏதும் உபயோகிக்காமல்,*
*உருவான சிலைகளின் எண்ணிக்கை,*
*இவைகளுக்குத் தெரியும்!*
*மற்றொரு ரகசியமும் இவைகளுக்குத் தெரியும்!*
*எம் ஆசிரியர் ஓர் சிற்பி என்று!!!*

◎

## உன்னால் தான்!

*கடிவாளம் கட்டிய குதிரையாய் நான்,*
*கட்டுப்பட்டு நடப்பதும்! உன்னால் தான்!*
*விவரம் அறியாக் குழந்தையாய் நான்,*
*சில சேட்டைகள் செய்வதும் உன்னால் தான்!*
*உறக்கம் மட்டும் தொலைத்து விட்டு, நான்*
*கனவைக் காண்பதும் உன்னால்தான்!*
*கண்ணெதிரே உள்ள காலணியை, நான்*
*கால் மாற்றி அணிந்ததும் உன்னால்தான்!*
*கொசுக்களை கொன்று குவிக்கும், நான்*
*கடிக்க விட்டு ரசிப்பதும் உன்னால் தான்!*
*பெயர் எழுதும் நேரத்தில் நான்,*
*உன் பெயரை எழுதுவதும், உன்னால் தான்!*
*எண்ணிக்கையில் முடியும் கண்ணீர்த் துளிகள்,*
*இன்று எல்லை மீறி வழிவதும் உன்னால் தான்!*
*பேனா மூடியைத் திறந்து வைத்து, இன்று*
*வார்த்தைக்காகக் காத்திருப்பதும், உன்னால் தான்!*

◎

## முழுவதும் படிக்கவும்!

*விழாக்கோலம் பூண்ட ஊர்!*
*கொடிகளும் பூக்களும்,*
*அலங்காரத்திற்கு ஒப்புக்கொண்டன!*
*புக முடியாத சாலைகளும்,*
*நீரூற்றிக் கழுவப்பட்டன!*
*கிருமிகளுக்குக் கோடை விடுமுறை,*
*கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டன!*
*தூக்கி எறியப்பட்ட குப்பைகள், இன்று,*
*மதிப்பளித்து பராமரிக்கப் படுகின்றன!*
*கழிவு நீர்க் குழாய்கள்,*
*தற்காலிகமாக முகக் கவசம் அணிகிறது!*
*மனித உருவத்தை விட பெரிதாகிறது,*
*பதாகைகளும் சுவரொட்டிகளும்!*
*செவிகளை துளைக்கிறது,*
*சேவகர்கள் எழுப்பும் கோஷங்கள்!*
*புத்தாடை அணிந்த மக்கள்,*
*பூகம்பம் போல நகர்கின்றனர்!*

*ஏனப்பா! ஏதாச்சும் கோயில் திருவிழாவா?*
*ஐயோ இல்லைங்க,*
*எங்க ஊருக்கு முதலமைச்சர் வராரு!!!*

◎

## தரம்

*என்றும் ரோட்டில் நின்று,*
*இந்த உலகில் நடக்கும்,*
*அனைத்தையும் பார்க்கும் நான்!*
*இன்று, நான்கு இன்ச்,*
*மேலிருந்து பார்க்கிறேன்!*
*"புதுசா ரோடு போட்டிருக்காங்க"*
*ரோடு தான் உயர்கிறது...*
*நம் வாழ்க்கைத்தரம் இல்லை!*

*ஆனாலும்,*
*ஒருவரின் வாழ்க்கை உயர்கிறது!*
*யார் என்று தெரியுமா?*
*ஆறு இன்ச் போட வேண்டிய ரோட்டை!*
*குறைத்து நாலு இன்ச்சாக போட்டவற்கு!!!*

◎

## தலை கோதுபவள் இல்லை!

*அடிக்கடி தலை கோதுபவள் இல்லை,*
*என் தவறுகளில் தலையில் குட்டுபவள்!*
*கட்டியணைத்து மட்டும் அரவணைப்பவள் இல்லை,*
*கண்டிப்பிலும் என்னை அரவணைப்பவள்!*
*கைப்பிடித்து வழிகாட்டுபவள் இல்லை,*
*தன் வாழ்க்கையைக் காட்டி வழிநடத்துபவள்!*
*கடமைகள் மட்டும் செய்பவள் இல்லை,*
*என் கடமை எது என அறியச் செய்தவள்!*

*தான் உண்டு ருசிப்பவள் இல்லை,*
*நான் ரசிக்கும் விதத்தை ருசிப்பவள்!*
*மார்போடு அணைத்து பால் மட்டும் ஊட்டவில்லை,*
*மடிமீது படுக்க வைத்து படிப்பையும் ஊட்டியவள்!*
*வெற்றியில் மட்டும் தோள்கொடுப்பவள் இல்லை,*
*தோல்வியிலும் முகம் தழுவி திருஷ்டி கழிப்பவள்!*
*தன்னை கவனிக்க நேரமில்லாதவள் இல்லை,*
*என் முகப்பரு விளைந்த முகத்தையே,*
*முழு நேரம் கவனிப்பவள்!*

*கருவறையில் இருப்பதெல்லாம்,*
*தெய்வம் என்றால்!*
*கருவறையில் சுமந்த இவளை,*
*என்னென்று புகழ்வேன்!!!*

◎

## பட்டாம்பூச்சியாய் பிறக்கலாம்!

*மனிதனாய்ப் பிறந்து,*
*கோழையாய் அழுது,*
*அடுத்தவரின் தயவில் வாழ்ந்து,*
*அரைகுறை அறிவை ஏற்றிக் கொண்டு,*
*வாழ்வின் அர்த்தம் அறியாமல்,*
*பணத்தின் மதிப்பை மட்டும் அறிந்து,*
*பிணமாய் போகும்,*
*மனிதராய்ப் பிறப்பதை விட....*

*சுயமுயற்சியில் வீடு கட்டி,*
*கட்டிய வீட்டின் பரிசாக,*
*இரண்டு இறகுகள் கொண்டு,*
*பூக்களை மட்டும் காதலித்து,*
*குறைந்த காலம் மட்டும்*
*அனைவரும் ரசிக்கும் படி*
*வாழ்ந்துவிட்டு,*
*இறுதிச் சடங்கிற்கு கூட*
*யாரையும் அழைக்காமல் இறக்கும்,*
*பட்டாம்பூச்சியாய்ப் பிறக்கலாம்!!!*

## தனிமை

*விண்வெளியில் மிதக்கிறேன்!*
*பூமிக்கு அடியில் சுற்றுலா செல்கிறேன்!*
*சூரியனைப் பார்த்து சிரிக்கிறேன்!*
*நிலவை நோக்கிப் பறக்கிறேன்!*
*காற்றயும் நான் நேசிக்கிறேன்!*
*வருகின்ற மாற்றத்தையும் சுவாசிக்கிறேன்!*
*உடல் உறுப்புகளுக்கு ஓய்வளிக்கிறேன்!*
*மனதிற்கும் மூளைக்கும் பதவி உயர்வு தருகிறேன்!*
*தண்ணீர்க் குட்டையில் கல் எறிகிறேன்!*
*தெளிந்த பின்பு அதில் முகம் பார்க்கிறேன்!*
*கற்பனையில் கனவு காண்கிறேன்!*
*கனவை மட்டும் காதலிக்கிறேன்!*
*கவிதைகள் எழுதிக் குப்பையில் வீசுகிறேன்!*
*குப்பைத் தொட்டி பற்றிக் கவிதை வரைகிறேன்!*
*சூழ்நிலைக்கு ஏற்பப் பாடல் பாடுகிறேன்!*
*அர்த்தம் உள்ள வரிகளை, செவி கொண்டு தேடுகிறேன்!*
*சில எண்ணங்களோடு சேர்த்தே பயணிக்கிறேன்!*
*பல ஆசைகளை அடிதே விரட்டுகிறேன்!*
*இத்தனையும் ஒரே நேரத்தில் செய்கிறேன்!*
*என் இரவு நேரத் தனிமையில்!!!*

◎

## மரம் - மனிதன்!

*வெகு நாள் கழித்து,*
*மரத்திற்கும் மனிதனுக்கும் ஒற்றுமை ஒன்று கண்டேன்!*
*மரமெல்லாம் தனக்கு உணவளித்த இலைகளை*
*உதறியே தள்ளுகிறது...*
*மனிதன் தனக்கு உணவளித்த*
*பெற்றோரை உதறுவதைப் போல!*

*காரணமும் ஒன்று தான்!!!*
*அங்கு பழுத்து விட்டது!*
*இங்கு பழுதாகி விட்டது!*

*உதிர்ந்த இடத்தில்,*
*மீண்டும் ஓர் இலை பிறக்கிறது!*
*ஆனால், மனிதனிடத்தில்*
*மனிதம் இறக்கிறது!*

◎

## நான் காதலிக்கிறேன்!

*உதிர்ந்து விடுவோம் என அறிந்தும்,*
*மரத்திற்கு உணவளிக்கும் இலைகளைக் காதலிக்கிறேன்!*
*உருகியே கருகுவோம் எனத் தெரிந்தும்,*
*தீக்குளிக்க தயாராகும் மெழுகினைக் காதலிக்கிறேன்!*
*வானத்தில் படியும் தூசிகளை,*
*துடைக்கின்ற மேகத்தைக் காதலிக்கிறேன்!*
*விண்வெளியை கண்களில் காட்டும்,*
*சூரிய ஒளியின் வேகத்தைக் காதலிக்கிறேன்!*
*மாதம் ஒரு நாள், பூமிக்குப் பின்*
*ஒளிந்து கொள்ளும் நிலவினைக் காதலிக்கிறேன்!*
*மழைக்காக காத்திருந்த நிலத்தின்,*
*துக்கமாக, அவற்றின் பிளவினைக் காதலிக்கிறேன்!*
*புழுதி அட்டை போட்ட புத்தகம்,*
*துடைத்தெடுத்து வாசிப்பதைக் காதலிக்கிறேன்!*
*புதிதாக வாங்கிய புத்தகம்,*
*பக்கம் திறந்து சுவாசிப்பதைக் காதலிக்கிறேன்!*
*மரத்தின் மீது மோதி,*
*விளையாடும் காற்றினைக் காதலிக்கிறேன்!*
*மகரந்தம் சுமந்து சென்று, செடிகளில்*
*இறக்குமதி செய்யும் வண்டுகளைக் காதலிக்கிறேன்!*
*கனவினை உருவாக்கி மனதில்,*
*மோதல் செய்யும் கற்பனையைக் காதலிக்கிறேன்!*
*கட்டத்திலே அடங்காமல், பரவியே கிடக்கின்ற,*
*காதலைக் காதலிக்கிறேன்!!!*

◎

*நீதி தவறுகிறது!*
*சட்டமும் சேர்ந்து தவறுகிறது!*
*பணத்தின் முன்னால்...*

❍

*கவிதைகள் திருத்துமானால்,*
*என்றோ இந்த நாடு,*
*வல்லரசாய் மாறியிருக்கும்!!!*

❍

*“எச்சில் துப்பாதீர்”*
*பலகை கழுவப்படுகிறது, பல*
*வாயின் எச்சில்களால்!!!*

◎

*பிச்சை போடுங்கள்!*
*நீங்கள் கொடுக்கும் சில்லறை..*
*உங்களை தெய்வமாக்கலாம்!!!*

❍

*காலி மதுக்குப்பி,*
*ஒருவருக்கு சோறு போடுகிறது,*
*அவர் குடிப்பதில்லை!!!*

❍

*ஓங்கி நிற்கும்,*
*செல்போன் கோபுரம்...எதிரியாகிறது,*
*சிட்டுக் குருவிக்கு!*

◎

## குடிமகன்!

*ஊரோட ஓரத்துல இருக்குது ஒரு டாஸ்மாக்கு!*
*அங்கிருந்து தொடங்குது என்னோட ஃபிளாஷ் பேக்கு!*

*ஊட்டுக்காக ஓழச்சுபுட்டு,*
*உறக்கம் மட்டும் தொலச்சுபுட்டு,*
*வீதியல்லாம் திருஞ்சிருக்கேன்,*
*பொய்யாகவும் சிரிச்சிருக்கேன்!*

*நிம்மதியத் தேடிப் போனா,*
*தியானம் பண்ணுனு சொல்றாங்க!*
*ஓடியாடி ஓழச்ச ஓடம்பு!*
*ஒத்த எடத்துல அடங்கவில்ல!*

*எவனோ நல்ல மனுசன்!*
*பாட்டில்குள்ள சொர்கமுன்னு,*
*தண்ணி கலக்கிக் குடிக்கச் சொன்னான்!*
*மொத தடவ முயற்சி பண்ணேன்!*

*"முயற்சிகள் என்றும் வீண்போவதில்லைன்னு",*
*பெருசெல்லாம் சொல்லிட்டு போயிருச்சு!*
*அது என்னமோ வாஸ்துவம் தான்!*
*ஆனா, முயற்சி செஞ்ச நான் தான் வீணா போய்டேன்...*

*சரக்கு வாங்கி அடிச்சிபுட்டு,*
*நானும் இப்போ போதை ஆனேன்!*
*படிப்பில்லா தற்குறி நான்,*
*ஆங்கிலம் பேசும் மேதை ஆனேன்!*

*லுங்கி வேட்டி அவுந்த பின்னும்,*
*மானம் மரியாதை போன பின்னும்,*
*உசுரு மட்டும் மிச்சம் இருக்கு,*
*குவாட்டர் பாட்டில் முழுசா குடிக்க!*

*பொண்டாட்டிய அழுக வெச்சேன்!*
*கொழந்தய நான் வெறுக்க வெச்சேன்!*
*எனக்கு கூட வருத்தம் வரும்,*
*அவ தாலிய, அடகு கடையில பாக்கயில!*

*அரசாங்கம் தான் விக்குதுனு,*
*அளவுக்கு அதிகமா குடிச்சிபுட்டென்!*
*குடிகிறவன் கெட்டவன்னா,*
*குடிய விக்குறவன என்னனு சொல்ல...!*

*குடிகாரன் கீழ சரிஞ்சா!*
*தூக்கிவிட ஒருத்தரும் இல்ல...*
*பொருளாதாரம் சரியாம காக்க,*
*குடிகாரன் ஒருத்தன் தான இருகான்!!!*

## கடைசிக் கடிதம்!

*பேசி முடிந்த நாட்களெல்லாம்,*
*மனதிற்குள் பரப்பி வைத்தேன்!*
*உரையாடல் இல்லா நாட்களை நான்,*
*கண்ணீர் கொண்டு நிரப்பி வைத்தேன்!*

*உன் சிரிப்புக் கடலில் தொலைந்த இதயம்,*
*மீட்டெடுக்க நான் பயிற்சிக்கிறேன்!*
*உன் பார்வைப் புயலில் சிதைந்த மனதை,*
*மீண்டும் கட்டியமைக்க முயற்சிக்கிறேன்!*

*நிர்பந்தப்படுத்தா நிலைக்கு நான்,*
*நிரந்தரமாகத் தள்ளப்பட்டேன்!*
*கற்பனையிலும் உன்னை நினைத்து,*
*அணுஅணுவாய்க் கொல்லப்பட்டேன்!*

*என் சந்தோஷ நேரமெல்லாம்...*
*உன்னை வந்தே சேரட்டும்..!*
*என் கவலை தாங்கும் காகிதமே...*
*கடைசிக் கடிதமாய் மாறட்டும்..!*

## எல்லாம் அவள்!

*அடர் விரிந்த நெற்றியில்,*
*ஒற்றைப் பொட்டு வைப்பவள்!*
*சொந்தமாகத் தன் மேனியில்,*
*மின்மினிப்பூச்சி வளர்ப்பவள்!*
*கார்மேகம் கொஞ்சம் திரியாக்கி,*
*வில்லெனப் புருவம் புனைந்தவள்!*
*திசை மாறும் கூந்தலை ஒதுக்கி,*
*காதுகளின் கட்டுப்பாட்டில் வைப்பவள்!*
*இனிய சொற்கள் பேசிப் பேசி,*
*காற்றையும் காதலிக்கச் செய்தவள்!*
*நட்சத்திரங்களை விரல்விட்டு எண்ணி,*
*விண்வெளிக்கு மோட்சம் அளிப்பவள்!*
*அன்றாடம் இயற்கையுடன் உரையாடி,*
*இயற்கைக்கு அழகுக் குறிப்பு தருபவள்!*
*பொறாமை கொண்ட பூக்களுக்கு,*
*புத்தி கூறி, தன் தலையில் சூடுபவள்!*
*வெட்கம் என்ற சொல்லுக்கே,*
*புதிய அகராதி படைப்பவள்!*
*என் பேனாவையும் மயக்கி,*
*அவளைப் பற்றிக் கவிதை எழுதச் செய்தவள்...!*

◎

